Registered No. M 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆஞ்ஞாவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 2. } 1911௵ அக்டோபர்௴ 15௳
விரோதகிருது௵ புரட்டாசி௴ 30௳ } பகுதி 6.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

02

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
| --- | --- | --- |
| மாதுஸ்ரீ அக்கிபெஸண்டு அம்மையார் நமது தலைவர் அவர்படம் | ப. நா. | க௯௩ |
| அக்கிபெஸண்டு அம்மையார் சரித்திரம் | ரா. கிருஷ்ணமாச்சாரியார் | உ0௩ |
| வெள்ளியம்பலம் என்னும் ஞானிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | ப. நா. | உக௫ |
| புத்தக வரவு, பத்திரிகை வரவு, சமாசாரம் | பத்திராதிபர் | உ௩0 |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | | |



**The Swadeshi Life Assurance Co', Ltd,**

**BOMBAY.**

**ஹெட் ஆபீஸ் பம்பாய்,**

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மேன்.

| | |
| --- | --- |
| மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A F. I. A. (London) | ஆக்சுவரி |
| K சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A. F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் F. M. U F B. U. பம்பாய் | மானேஜர் |
| எம் கே. இராஜகோபாலசாரியார் அவர்கள் F T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R Chari Brothers" West Tower Street, Madura. | சென்னைராஜதானியின் சீப் ஏஜண்டு. Chief Agents. |

எல். புருஷோத்தமநாயுடுகாரு F. T. S. எடமணல், சியாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to

Messrs. K R. CHARI BROTHERS,

*West Tower Street, Madura.*



MRS. ANNIE BESANT.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. | 1911௵ அக்டோபர்௴ 15௳ / விரோதகிருது௵ புரட்டாசி௴ 30௳ | பகுதி 6.

## யாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார்.

### நமது தலைவர்.

---

அந்நிபெஸண்டு அம்மையாருக்கு இந்த அக்டோபர் ௴ முதல் தேதியுடன் 64 ஆண்டு நிறைவு ஆகி 65-வது ஆண்டு ஆரம்பமாகிறது. அவர் பால்யகாலத்தில் உரிய கல்விகற்று யௌவநம் ஆரம்பிக்க, பேஸண்ட் என்ற பாதிரியாரை மணம்புரிந்து, ஒரு புருஷப் பிரஜையையும், ஒரு ஸ்திரீப் பிரஜையையும் பெற்றார். பின்பு விவிலிய நூலிலும், கிறிஸ்து மதத்திலும் நம்பிக்கை குன்றவே புருஷனும் ஸ்திரீயும் மதசம்பந்தமான அபிப்பிராய பேதத்தால் ஒருவரோடொருவர் நேர்மையாகவில்லாமற் போனதால், நமதம்மையார் புருஷனைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துமதத்தைத் துறந்து, நாஸ்திகமதம் கைக்கொண்டு, ஸ்ரீமாந். ப்ராட்லாவுடன் நாஸ்திகமதத்தைப் பரவச் செய்தும், அநேக வருஷங்கள் பொதுஜநங்களுக்கு நலம்பயக்கும் காரியங்களில் இடையறாது விடாமுயற்சியை யெடுத்துக்கொண்டும், மநம், மெய், மொழி, இம்மூன்றும் மாறுபாடின்றி நேர்மையாய் நடைபெற்றுவரவும், ஸத்தியமே வழியென்றும், ஸத்தியமே செயலென்றும், ஸத்தியத்தையே நாடிக் காலங்கழித்தனர் எனத்; தாம் இறந்தமேல் பிறர் சொல்லிக்கொண்டால் அதுவே போதுமான பாக்

கியம் என்றும், உறுதியான நன்னம்பிக்கை யுள்ளவராய்க் காலங் கழித்து வந்தனர்.

2. இப்படி வருநாளில் ஒரு ஸம்பவம் நேரிட்டது. அதாவது, ஹேலினாம்பாள் அம்மையார் (H. P. B.) ஸங்மார்க்கஞாநக் களஞ்சியம் எனச் சொல்லத்தகும் அற்புதமான "குப்தசாஸ்திரம்" என்ற ஒரு ஞாந நூலை 1889-ம்வருஷத்தில் பிரஸித்தம் செய்தார்கள். அப்புத்தகம் ரிவ்யூ ஆப் ரிவ்யூஸ் (Review of Reviews) என்னும் பத்திரிகையின் அதிபரான ஸ்ரீமாந். ஸ்டெட் (Stead) என்பாரின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அவர் தம்முடைய உதவி பத்திராதிபர்களை அப்புத்தகத்தை ஆராய்ந்து அதன் தகைமையையும், உண்மையையும், தம்முடைய பத்திரிகை வாயிலாக வெளியிடும்படி கேட்டும் அவர்களால் இயலவில்லை. மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையார், ஒருநாள், ஸ்ரீமாந். ஸ்டெட் என்பாரைச் சந்திக்க நேரிட்டது. அப்பொழுது அவர் சொன்னதாவது:—" அம்மணி! ஞாந நூலென்று சொல்லப்பெறும் இரண்டு பெரிய புஸ்தகங்கள் இதோ என் முன்னர் மேஜையில் இருக்கின்றன. ஹேலினாம்பாள் அம்மையாரால் இயற்றப்பட்டு அனுப்பப்பட்டன. நம்முடைய தொழிற்கள (Office)த்தில் இப்புத்தகங்களை ஆராய்ந்து அதின் தகைமையையும் பெருமையையும்பற்றி விவரம் எழுதக்கூடியவர் இல்லை. நீவிர் இத்தன்மையான நூல்களில் அதிக அபிலாஷையுள்ளவர்; ஞாந நூல்களின் ஆராய்ச்சியில் நிபுணர். அதனால் நீவிர் இப்புத்தகங்களை நன்கு ஆராய்ந்து, அவற்றின் தகைமையையும் பெருமையையும் பிறர் உணருமாறு ஒரு வியாஸம் எழுதுவீர்கள் என, உடனே "ஓம்" என்று சொல்லிப் புத்தகங்களிரண்டையும் அம்மையார் எடுத்துக்கொண்டு தம் கிருஹம் சென்றார்.

3. இதைப்பற்றி அம்மையார் சொல்லுவதாவது:—"பக்கம் பக்கமாய், மிக ஆவலுடனே, சிதறாத சிந்தனையுடையவளாய், இப்புத்தகங்களைப் படித்தேன். மந எழுச்சி உண்டானது. பழமையானவைகளை ஞாபகத்திற்கு வருவனவாகத் தோன்றின. அவைகளிற்கண்ட விஷயங்கள் முதலில் என்னைப் பிரமிக்கும்படியாகச் செய்தன. மேற்பார்வையில் ஒன்றோடொன்று பொருத்தமில்லா

மற்றேன்றிய பலவாறான விஷயங்கள் சற்று உற்றுநோக்க, நேர்மையுள்ளவைகளாகவும்பொருத்தமுள்ளவைகளாகவும்பிரகாசித்தன. எத்தனையோ தத்துவங்களின் ரகசியங்களும், எத்தனையோ புதிர் போன்ற விஷயங்களும் தெளிவுற்றன. இதுகாறும் பலதுறைகளை நாடித் தேடி அவைகளில் அகப்படாத உண்மைப் பொருட்களை இப் புத்தகங்களிற் கண்டேன். நாஸ்திகமத சம்பந்தமாய்ச் சமாதானம் பெறாத அநேக கடினமான வினுக்களுக்குத் தெளிவானதும் பொருத்தமானதுமான விடைகளை அறிந்துகொண்டேன். பலவாறுகச் சமுத்திர அலையில் மிதந்துகொண்டிருக்கும் நங்கூர மிதப்புப்போல் அலைந்து கொண்டிருந்த என் மனம் சாந்தம்பெற்றது. சுகிருதம் அடைந்தேன். பிறகு இப்புத்தகங்களின் மஹிமையையும், ஞான உயர்வையும்பற்றி விஸ்தாரமான ஒரு வியாஸம் எழுதி ஸ்ரீமான் ஸ்டெட் என்பாரிடம்கொடுத்தேன். இப்புத்தகங்களை உலகத்திற் கருளிய அவ்வுத்தமியைத் தரிசிக்கவேண்டுமென அவரிடம் ஒருசிபாரிஷைக்கடிதம் வேண்டினேன்." பின்பு ஹெலினாம்பாள் அம்மையாருக்கு அவர் கொடுத்தகடிதத்தை அனுப்பியதுடன், தான் பார்க்கவரலாமோ என வினவி விநயமாய் ஒரு கடிதத்தையும் எழுதியனுப்பினார். "தங்கள் வரவை எதிர்பார்க்கிறேன்" என்ற பிரியமான பதிலும் கிடைத்தது. மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையாரும் வேறு ஒரு நண்பரும் மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் வசித்துவந்த கிருஹத்திற்கு ஒருநாள் சாயங்காலம் சென்றார்கள். அது வசந்தகாலமாயிருந்தது. கிருஹத்தில் நுழைந்தார்கள். கதவு திறக்கப்பட்டது. ஹெலினாம்பாள் அம்மையாரைப் போன இருவரும் கண்ணுற்றார்கள். உரத்த குரலில் கனிர் என்ற சப்தத்துடன் கம்பீரமாய் "வருக, பிரியமுள்ள அன்னிபெஸண்டு அம்மை, வருக. தங்களைச் சந்திக்க வெகுகாலமாய் என்மனம் சிந்தித்துக்கொண்டிருக்கிறது" என்று ஹெலினாம்பாள் அம்மையார் சொல்லி பெஸண்டு அம்மையாரின் கையை இறுகப் பிடித்தனர். பெஸண்டு அம்மையார் இப்பிறப்பில் முதல் முதல் ஹெலினாம்பாள் அம்மையாரின் நக்ஷத்திரங்கள்போல் ஜ்வலிக்கின்ற இருநேத்திரங்களையும் பார்த்தார். இச்சந்திப்பைப்பற்றி மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையார் சொல்வதாவது "என் ஹிருதயத்தினின்று அன்பின் மிகுதியால்

மந எழுச்சி உண்டாவதை உணர்ந்தேன். பழமையின் பிரஞ்ஞை வந்ததுபோல் தோன்றியது பின்பு ஆலிங்கித்தேன். பொதுவான விஷயங்களைப்பற்றி லோகாபிராமமாக ஹேலிநாம்பா ளம்மையார் பேசினார். ஞாநவிஷயங்களைப்பற்றி ஒன்றும்பிரஸ்தாபித்தாரில்லை. இப்படிப் பேசிக்கொண்டிருக்குங்கால் உள்மர்மங்களைத் தாமே அறியுமாறு போல ஜ்வலித்துக்கொண்டிருக்கின்ற அத் திருநேத்திரங்கள் இரண்டும் என் கண்களின் நோக்கில் எதிர்ப்பட்டன. இனிய பிரியமுள்ள தொனியில் அடியில் வருமாறு ஹேலிநாம்பாள் அம்மையார் வசநித்தனர். "என் பிரியமுள்ள பெஸண்டு அம்மை! எங்களில் ஒருவராக நீவிர் ஆதல் எப்போது? அப்படி வருவீராகில் நானென் சொல்வேன்." அந்நிமிஷமே தடுக்கவொண்ணாத அவா என்னை மேற்கொள்ளவே, நான் தலைகுனிந்தேன். விசுவாஸத்துடன் அவரை முத்தமிட்டேன். திடீரென நான் இவ்விதம்செய்யத்தகுமோ என்று நான் என்ற அகங்காரம் என்னை மேற்கொண்டது. உடனே அத்தன்மையான என் புத்தியீனத்தை நொந்து அவ்வெண்ணத்தைத் தவிர்த்தேன். பின்பு விடை பெற்றுக்கொண்டு அம்மையார் கேட்ட கேள்விக்கு உத்தரம் செய்தலை நழுவவிட்டு என் கிருஹத்திற்கு ஏகினேன்."

4. பின்பு இருவரும் மறுபடி ஒருமுறை சந்தித்தனர். அப்போது பிரஹ்மஞாநசபையில் சேரவேண்டுமென்று தமக்கிருந்த அவாவைப் பெஸண்டு அம்மையார் தெரிவித்தனர். "இச்சபையைச் சேருமுன் இச்சபையைப்பற்றியும் அது சம்பந்தமாக என்னைப்பற்றியும் கண்டபடியாக 'Psychic Research Society' என்பார் ஒரு வரலாறு விஸ்தாரமாய் எழுதிப் பிரசித்தம் செய்துள்ளார். அதைப் பார்த்ததின்மீது நீர் என்னிடம் திரும்புவீராகில், அப்போது உம்மைச் சேர்த்துக்கொள்வேன்" என்று ஹேலிநாம்பாள் அம்மையார் சொன்னார். பின்பு அவ்வரலாற்றை வாங்கி ஆதியோடந்தமாக வரிவரியாய்ப் படித்து அதில் அம்மையாரைப்பற்றியும் சபையைப்பற்றியும் அவதூறாகச் சொன்னவை எல்லாம் அக்கிரமமானவையென்றும், மெய்யல்லவென்றும், அத்திய அபிப்பிராயத்துக்குப் போதுமான ஸாக்ஷ்யமில்லை என்றும், தாகங்காரத்தின்மீது

சபைக்குக் கெடுதலை உண்டுபண்ணவேண்டுமென்ற விஷம புத்தியுடன் எழுதப்பட்டவைகளே என்றும் அறிந்து, பொய்க்களஞ்சியமான அவ்வரலாற்றைத் தலைசுற்றி எறிந்து, மெய்யைப் பொய் போலும் பொய்யை மெய் போலும் காட்டும் உலகத்தாரின்கீழ் நோக்கிய புத்தியை நினைந்து வியசனித்து உண்மை தெரிந்து, பின்பு அந்நிபெஸண்டு அம்மையார் Countess Watchmeister அம்மையைச்சந்தித்து, அவர்மூலம் பிரஹ்மஞானசபையில் ஓர் அங்கத்தினராக ஏற்பட்டனர். பின்பு, ஹெலினாம்பாள் அம்மையாரைத் தரிசித்தனர். "எங்கள் சபையைச் சேர்ந்தீர்போலும்" என்றார். "ஓம் என்று சொல்லி அவர் முன்னர் பணிந்தேன். அவர் கையைப் பிடித்தேன். அவரது இருவிழிகளையும் கண்ணுற்றேன். என்னைத் தம்முடைய சிஷ்யவர்க்கத்துள் ஒருத்தியாக அங்கீகரிக்க உடன்படுவீரோ? உம்மை என்னுடைய குருவாக அடைந்தேன் என்ற பாக்கியத்தை உலகில் பிரசித்தம் செய்யும்படியாக அநுமதிகொடுப்பீரோ என்றேன். கடுமையான அவர் முகம் தளர்ந்தது. எக்நாளும் சம்பவியாதபடி அவர் கண்களில் நீர் ததும்பியது. பின்பு கம்பீரமாகத் தம் கரத்தை என் சிரசின்மீது வைத்தார். "உயர்நலம் அமைந்த குணத்தோய் நீ! உனக்குக் குருப்பிரசாதம் வருக!" என்றார் இது நேர்ந்தது 1889-ம்௵ மேமீ 10௳. அதுமுதல் ஹெலினாம்பாள் அம்மையாரின் மரண பரியந்தம் (8—5—1891) இருவருக்குள்ளும் நிகழ்ந்த குருசிஷ்ய சம்பந்தம் உயர்வற உயர்நலமமைந்ததாய் நடைபெற்றது; சுக்கிலபக்ஷச்சந்திரன்போல் மேன்மேலும்விருத்தியடைந்தது. அடியிற்கண்ட பாசுரத்திற்குத் தாமே உதாரணமாக மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையார் ஒழுகுவாராயினர்.

"சற்குணம் வாய்மை தயாவிவேகந் தண்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்த
லற்புதமே தோன்றி லாகுஞ்சற் சீடனே". திருமந்திரம்.

5. அவர் இறந்தமேல், அக்குரு உபதேசத்திலிருந்த நன்னம்பிக்கையும் அவர்பால் பக்தியும் நாளிதுவரை அபிவிருத்தியாகிக்கொண்டே வருகின்றன என்பது பெஸண்டு அம்மையார் பலவிடங்க

ளில் செய்துகொண்டுவரும் உபந்நியாஸங்களாலும், அவரால் வெளிவந்திருக்கும் புஸ்தகங்களாலும் தெளிவுபெறும். பிரஹ்மஞாந சபையைச் சேர்ந்ததுமுதல் நாளிது பரியந்தம் 21 வருஷ காலமாய் இராப்பகலாய் இடைவிடாமல், தளராமல், சோர்வின்றி, ஷை சபையின் உத்கிருஷ்டத்தைப்பற்றியும், அதனால் ஜநசமூகத்துக்கு உண்டாகும் உபர்நலத்தைப்பற்றியும், அச்சபையால் உலகத்துள் வெளிவந்திருக்கிற ஞாநவிஷயங்களைப் பற்றியும், தத்துவங்களைப் பற்றியும், அச்சபையின் ஞாநவிஷயங்களின் பலதுறைகளின் அநுஷ்டாந முறைகளைப்பற்றியும், பல இடங்களிற் சென்று உபந்நியாஸங்கள் செய்துகொண்டு வந்திருக்கின்றனர். அவர்களால் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி வெளிவந்திருக்கிற புஸ்தகங்களுக்குக் கணக்கில்லை, ஏராளமானவை. அவர் நம் தேசத்துக்கு முதன்முதல் 1893௵ நவம்பர்௴ 19௳ கப்பலிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்தில் இறங்கினர். அன்று இரவு நம் மதுரைமாநகர் வந்தனர். நம்மவர்கள் அவர் நல்வரவை அன்புடன் ஏற்றனர். பின்பு அம்மையார் இந்தியாதேச முழுவதும் சுற்றினர். தேசத்திலுள்ள எல்லா நகரங்களும் சென்றனர்.

6. ஹிந்துமதத்தின் கண்ணுள்ள உயர்தர ஞாந விஷயங்களையும் தத்துவங்களையும் பற்றிச் சென்றவிடமெல்லாம் உபந்நியாஸம் செய்தனர். இதுகாறும் பெண்பாலர் ஒருவரும் இத்தன்மையாக வெளிவந்து உபந்நியஸித்தலை அநுபவவித்தமாக அறியாத இந்தியர் பிரமித்தனர். உபநிஷத்துக்களில் பிரஸ்தாபிக்கப்பெற்றுள்ள கார்கியோ, மைத்திரேயியோ, அல்லது வாஸிஷ்டத்தில் சொல்லப்படும் சூடாலையோ, இத்தேசத்தின் கீழ்க்கடையான நிலைமையைக் கண்டு அநுதாபப்பட்டுத் திரும்பவும் சரீரமெடுத்து உலகில் உலாவுகின்றனர்! எனத் திகைப்புற்று வினவுவாராயினர். மதுரை ஸ்ரீ மீநாக்ஷி சுந்தரேசுவரர் கோவிலில், அம்மையார் இவ்வூரிலுள்ள திருஞாந சம்பந்தமூர்த்தி மடாதிபதியைச் சந்தித்தனர். அப்போது, அப்பிரகிருதத்தில் இருந்த அம்மடாதிபதியவர்கள் அம்மையாரை நோக்கிச்சொன்னதாவது "ஞாநமும் தர்மமும் குன்றி, அஞ்ஞாநமும் அதர்மமும் ஏற்றம் பெறுங்கால், சமயத்துக்கேற்ப

சரீரத்தை எடுத்து ஈசுவரன் அவதாரம்செய்வர் எனக் கீதையில் சொல்லியவண்ணம், இப்போது ஸரஸ்வதியே உருவமெடுத்து அவதரித்திருக்கின்றமைபோலத் தாங்கள் வந்திருக்கின்றீர்கள்" என மிக அன்பு ஆதரவுடனே மொழிந்தனர். இத்தேசம் நலம்பெற வேண்டுமென்றும், இத்தேசத்திற்கு ஈசுவர அருட்பிரஸாதம் திரும்பவும் வரவேண்டுமென்றும், இந்தேசம் மேன்மைபெற்று உலகத்திற்கே ஞானகுருவாக அமையவேண்டுமென்றும், அம்மையார் பலவாறாக முயற்சிகள் செய்து, தம் உடல், பொருள், ஆவி, மூன்றையும்ஆரியாவர்த்தமாகிய இப்புண்ணிய பூமிக்கு அர்ப்பணம் செய்திருக்கின்றனர். "என் சரீரமட்டும் ஆங்கிலேய சரீரமே தவிர என் அந்தராத்மாவானது ஹிந்து சுபாவத்தையே யுடையது. ஆங்கிலேய சரீரத்தால் தான், இந்தியாவுக்கு பூர்ண கைங்கரியம் புரிவது சாத்தியமாதலால் அந்த நிமித்தமாக இவ்வித சரீரத்தை நான் இப்போது வகித்திருக்கிறேன்" என ஒரு சமயம் அம்மையார் பிரஸ்தாபித்திருக்கின்றார். ஹிந்துமத இளைஞர்கள் கவர்ன்மெண்ட் வித்தியாசாலைகளில் அடைந்துவரும் கல்விப்பயிற்சியானது ஈசுவர பக்தியைக்கெடுத்து அவர்கட்கு நாஸ்திக புத்தியையே பயக்கக் கூடியதாயிருப்பதாலும், அவர்கள் கிறிஸ்தவ பாதிரிகளால் நடத்தப்பெற்று வரும் வித்தியாசாலைகளில் படிப்பதால் மதப்ரஷ்டர்களாகப் போகக் கூடிய நிலைமையிலிருப்பதாலும், அவர்களுக்கு ஹிந்துமதக் கொள்கைகளின் ஆராய்ச்சியும், தர்மத்தின் விவேகமும் கற்பிக்கவேண்டுமென்ற சங்கல்பத்துடன் வாரணாஸீ என்ற காசி க்ஷேத்திரத்தில் பிரதான ஹிந்துக் கல்விச்சாலையொன்று இந்த அம்மையார் ஸ்தாபித்துள்ளார். அதில் இனி வாலிபர்கள் மேனாட்டுக் கல்விப் பயிற்சியிலும், கீழ் நாட்டு ஞானப் பயிற்சியிலும், மேன்மையடைந்து, உத்தம புருஷர்களாக ஆவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த வித்தியாசாலை 10வருஷ காலமாய் மேன்மேலும் அபிவிருத்தியாகிக் கொண்டுவந்து இனி ஸ்தாபிக்கப்பெறும் ஹிந்து சர்வகலாசாலை (Hindu University) யின் சிரோரத்நமாக இனி விளங்குவதாகும். ஷை வித்தியாசாலையுடன் பெண்களின் கல்வியபிவிருத்தியின்பொருட்டுப் பெண்பாடசாலை யொன்றை அம்மையார் ஸ்தாபித்திருக்கின்றார்கள். மேலும், இந்திய புத்திரரும் புத்திரியும், இந்திய ஜனஸமூ

கத்தின்பொதுநலம்பாராட்டவும், பொதுநன்மைசெய்தலில்பழகவும், தர்மமுறை பற்றியும் நீதிமுறை பற்றியும் ஒழுகவும், ராஜவிஸ்வாசத்தை விருத்திபண்ணவும், இந்தியபுத்திரர், புத்திரிகளின் சங்கங்களையும் ஸ்தாபித்திருக்கின்றனர்.

7. பிரஹ்மஞாந சபையின் முன் தலைவராயிருந்த ஸ்ரீமாந் கர்ணல் ஆல்காட் என்பவர் 1907ஆ பிப்பிரவரிமீ 27உ இறந்த பிறகு, ஷை சபையாரால் தலைமை வகிக்கவேண்டுமென்றுமிக்கஆவலுடன் வேண்டப்பெற்று, அம்மையார் சபையின் அக்கிராஸநம் வகித்து, சபையின் தலைவராக இப்போது இருந்துகொண்டுவருகின்றனர். நாலுகண்டங்களிலும் இம்மஹாசபையின் கிளைச்சபைகள் இருக்கின்றன. இவைகளிற் பெரும்பான்மையானவற்றைப் பன்முறை உலகயாத்திரைசெய்கையில் நேரேயே கண்ணுற்று, ஆங்காங்குள்ளசபையின்அங்கத்தினர்களை ஸந்மார்க்கமுறையில் நடைபெறும்படி செய்வித்தும், ஏற்கனவே அம்முறையில் நடக்கின்றவர்களை உத்ஸாஹப்படுத்தியும், மதத்துவேஷ புத்தி குறையும்படியும்,ஜநஸமூகத்தில் ஸ்நேஹ பாவமும், நேர்மையான ஸஹோதரபாவமும், அபிவிருத்தியாகும்படிக்கும், வற்புறுத்தியும் வருகின்றனர்.

8. இப்போது, நம்முடைய பிரஹ்மஞாநசபையின் தலைமை பெற்று நடத்துகின்றவரான அம்மையாரின் தகைமையைப்பற்றிப் பூர்ணமாய் எழுதும் திறமையும, பேசும் வலிமையும் யாவரும் பெற்றிலரென்றே சொல்லலாம். அவருடைய மஹத்தான விஞ்ஞாநப் பயிற்சியும், மாசற்ற அகன்ற ஞாந எழுச்சியும், தூய்மையாம் சிந்தையும், வாக்கின் சாதுர்யமும், பிறர்நலம் பயக்கும் கர்மத்தில் தளராத முயற்சியும், தன்னை மறந்து பிறர்க்கு உபகாரம்செய்யும் சோர்வுபடாத் திறமையும், கண்டவர் மநம் களிக்கும்படிசெய்யும் முகமலர்ச்சியும், இன்சொலும் லோகப் பிரசித்தமானவை. ஸந்தேஹமின்றியில் நற்குண நற்சீலமுள்ள ஸ்திரீ ரத்நம் இப்போது உலகில் இவரைவிட மேலானவர் இலரென்றே சொல்லலாம். இவ்வம்மையாருடன் நாம் அடிக்கடி பழகுகின்றமையால், இவ்வம்மையாரின் உயர் நலத்தை உணர அநுகூலர்களாக ஆகிவிட்டோம். நலமுள்ள பலவாறான குணதிசயங்கள் இவ்வம்மையாரிடம் குடிகொண்டிருக்கின்றவைகளில் சிலபாகந்தான் வெளிப்படையாகத் தோன்றுகின்றன

எனத் திர்க்கதரிசி *ஒருவர் பிரஸ்தாபித்தனர். இன்னும் எத்தனையோ உயர்நலமமைந்த சக்திகளும் சீலங்களும் இவ்வம்மையாரிடம் குப்தமாக அமைந்திருக்கின்றன. இப்புண்ணியதேசமாகிய பாரத வர்ஷத்தின் வடபாரிசத்திலுள்ள ஹிமாசலவாஸிகளான மஹரிஷிகளின் அநுக்கிரஹத்தால் ஞாநதீக்ஷாமுறையில் இவ்வம்மையார் அக்குணாதிசயங்களைப் பெற்றிருக்கின்றனர். அம்மஹரிஷிகளே உலகத்திற்கு ஞாநாசாரியர்களாக முன் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர். இனியும் இருப்பராவர். அவர்களே

> "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
> வித்தகச் சித்தர் கணம்" எனப்படுவர்.

இச்சித்தர் கணமே வெள்ளியம்பலம்" (The White Brotherhood) எனப் பெயர் பெறும். இம்மஹரிஷிகளின் ஒரு சிஷ்ராகிய நம்முடைய அந்நிபெஸண்டு அம்மையார் அவர்களின் சேவகராய், அவர்களின் ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு, உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு உழைத்துக்கொண்டுவருகின்றனர்.

9. இவ்வம்மையாரின் வருதிக்குட்பட்டு நடைபெற முயலுகின்றவர்கள் பாக்கியமே பாக்கியம். இந்தியா† என்ற இப்புண்ணிய பூமியின்பால் அன்பு உள்ளவர்களே! இந்த அம்மையின் நலமான வார்த்தைகளைக் கேட்டு ஒழுகுமின்! இவ்வம்மையார் சொற்படி நடமின்! நம் தேசத்தின் இனி வருங்காலம் உயர்நலமுள்ளது. அஃது அடையப்புகும் கம்பீரமான பதவி இத்தன்மையது என நீவிர் கனவிலும் நினைத்திருக்கமாட்டீர்! உலகமெங்கும் பரவிக்கொண்டு வருகின்ற பிரிடிஷ் ராஜ்ஜியத்தின், ஓர் அங்கமாக, இந்தியா தேசம் அமைந்திருப்பது காகதாலீயம்போலத் தற்செயலாலாகியதென்று நினையற்க. மஹாத்துமாக்கள் முன்னரே செய்த கார்யம் அது. ஈசுவர சங்கற்பம அது. இந்தியா தேசம் உயர் நலம் அமைந்த ஸ்நாநத்தை இனி வகிக்கப்போகின்றது, என்பது நிச்சயமான விஷயம். அதன் அறிகுறியாக, மாக்ஷிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி என்பவரும் இனி வரும் டிசம்பர்மீ'த்தில தர்மராஜாவாகிய யதிஷ்டிரர் ஸம்ராட்டு என்ற பட்டம் பெற்று

---

* C. W. L.

† இந்தியா தேசம் உயர் நலம் பெறுதல், இந்தியர்களின் தியாகத்தினால் தான் இயலும் என்றார் நம்அம்மையார்.

ஸிம்மாஸநமேறின குருக்ஷேத்திரமாகிய டெல்லிமாநகரத்தில்; உலகத்திலுள்ள இராஜாக்களின் பிரதிநிதிகளும் இந்திய முடி மன்னர்களும் சூழ,மகுடாபிஷேக சம்பந்தமான விமர்சைபொருந்திய தர்பார் நடத்தப்போகின்றார். இனி வரும் நற்காலத்தின் ஸூசனை இதுவேயாகும்.

10. அதனால் இந்த பிரஹ்மஞான சபையின் தலைவர் இத்தேசத்தின் நலத்தை உத்தேசித்து உபதேசிக்கும் நல்வழிபற்றி நடமின். அதனால், நலம்பல பெறுமின். இந்தியா தேசம் மேன்மைபெற வாழுமின். நமதம்மையாருக்குப் பரமேசுவரன் தீர்க்க ஆயுளையும் பலத்தையும் கொடுப்பாராக.

குருதேவர்களின் அநுக்கிரஹம் நம் தேசத்துக்கும் அதன் முகமாய் உலகெங்கும் உண்டாகுக. எல்லாம் வல்ல இறைவன் அருட்பிரவாகம் உலகெங்கும் பரவுக.

ஓம் தத் ஸத் ஓம்.

ப. நா.

## நன்மொழி.

110. ஆக்ரஹம் அல்லது பரபரப்பான மநக்கொதிப்பு இருவகைத்து—பிறர்சுகத்தை சகிக்காமல் மநம் கொதித்தல், பிறர் தீயவை செய்யக்கண்டு சகிக்காமல் மநம் கொதித்தல். முன்னது துர் ஆக்ரஹம் எனவும்,பின்னது ஸத் ஆக்ரஹம் எனவும், பெயர் பெறும். முன்னது தவிர்க்கத்தக்கது, பின்னது, பூர்ணஞானம் வரும்வரை இருக்கத்தக்கது. பூர்ணஞானம் வந்த மேல் இதுவும் விடத்தக்கது ஞானி உலகத்தில் வாழும் முறையை பதஞ்சலி பகவாந் அடியில் வருமாறு உபதேசித்துள்ளார். ராகத்துவேஷாதிகள் (அகங்காரம், அசூயை, ஈரிஷை, கோபம் முதலிய துர்க்குணங்கள்) நீங்கி மநம் நிர்மலமாய் இருப்பதற்கு உபாயம் என்னவென்றால்:—சுகமாய் வாழ்பவரைப்பார்த்தால் சிநேகபாவத்தையும், துக்கத்திற்குள்ளாயினரிடம் தயை காருண்ணியத்தையும், புண்ணியம் செய்பவர்களிடம் சந்தோஷத்தையும், பாபம் செய்பவரையும் அவர் தொழிலையும் பற்றி கவநியாது இருத்தலையும், நம் மநத்தில் உண்டுபண்ணிக்கொளல் நலம். இதனால் மநச்சாஞ்சல்லியம் நீங்கும், மநம் ஒரு நிலைப்படும்.

உ 215

# * அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம்.

### கடவுள் வணக்கம்.

தோய்ந்துநின்ற பொருளனைந்துந் தோயாம னின்றொளிருஞ்
சுடராய்ச் செய்கை
யோய்ந்துநின்ற யோகியர்க்கே புகலிடமாய்ப் பிரமன் முத
லும்பரெல்லாம்
ஆய்ந்துநின்ற மறைமுடிவிற் பழுத்தசெழுங் கனியானான்
யாரோவன்னான்
ஏய்ந்துநின்ற மலரடியை முடிக்கணியாய் வேய்ந்துநின்றே
யேத்துவாமே.

---

## I—பிறப்பு.

### கலிநிலைத்துறை.

1. உலகெ லாந்திரண் டோர்வழித் தொக்கென வுரைப்ப
வலகின் மாந்தர்க ணிறைந்ததா யவனிமா மகட்குத்
திலக மென்றிடப் பற்பல வளங்களுஞ் செறிந்தே
யிலகி யோங்குவ திசைபெறு லண்டன்மா நகரம்.

2. பாரிற் பற்பல தேயத்துப் பயில்பொரு ளெல்லாம்
வாரிக் கொண்டுவந் திறக்கிமற் றுயிடை மலிந்த
சீரிற் செம்பொருள் கொள்ளுவான் கலம்பல தேனுண்
போரிற் றாங்குறப் பொலிவது லண்டன்மா நகரம்.

3. மிக்க வேழையு மிகுபெருஞ் செல்வரும் விசனந்
தொக்க பேர்களுஞ் சுகநுகர் பவர்களுஞ் சூழ்ந்தோர்
பக்க நல்லதாய் அல்லதாய் முரணுவ பலவு
மொக்க வேபயின் றுயர்வது லண்டன்மா நகரம்.

4. நீதிக் இருப்பிடம் திருபர்சிம் மாசனம் நேரார்
எதிக் கைப்படாக் கோட்டைவாள் வீரர்க ளிருக்குஞ்
சோதி மண்டலஞ் சொர்க்கமு மீதெனச் சொலுமா
வீதி பற்பல மிகுவது லண்டன்மா நகரம்.

---

*இது பால ஸரஸ்வதி ஸ்ரீமான். ரா. கிருஷ்ணமாச்சாரியார் 1900ஞுலத்தில் பெஸண்டு அம்மையார் மதுரைக்கு விஜயஞ்செய்த காலத்தில் பிரவஷித்தம் செய்து, பிரஹ்மஞானசபையில் அரங்கேற்றியது.

5. மண்ணின் மன்னுயிர்த் தொகையெலாந் தன்னுயிர்மான
எண்ணித் தண்ணளி சுரந்துசெங் கோனனி யியற்றிக்
கண்ணி யம்பெறு நம்முயர் அரசியுட் களிப்பாய்
நண்ணி வாழ்வுறப் பொலிவது லண்டன்மா நகரம்.

6. இன்ன நல்வளம் பற்பல விளைதரு நகரி
லன்ன மென்னநல் லாதரம் பெருகிய வன்பின்
முன்ன நிற்பவர் மொழிபல பயின்றவர் முதலாய்
மன்னு வுட்டோடு எரின் உயர் குலத்தினின் வந்தோர்.

7. எய்ந்த தத்துவப் பனுவல்க ளளவில வெல்லாம்
ஆய்ந்த புந்தியர் நரகமுஞ் சுவர்க்கமு மாகி
மாய்ந்த மாந்தர்கள் புகுமிட முண்டென வகுக்குந்
தோய்ந்த பற்பல சமயமு முண்மையாத் துணியார்.

8. இருந்தும் நெஞ்சகந் தூய்மையர் வாய்மையர் எவர்க்கும்
வருந்து மாறுகண் டிரங்குறு மிளகிய மனத்தர்
திருந்து வில்லியம் வுட்டேன் னொருபெருஞ் செல்வர்
முருந்துபோலொளிர் மொய்யந்நகை யொருவரை மணந்தார்.

9. மெலிந்த மாரிஸாங் குலத்தவ ராயினு மேனுள்
வலிந்த வேழுமன் னவர்மர பாதலாற் பொருளின்
நலிந்த போதினு மேன்மையும் வாய்மையு நடப்பும்
பொலிந்த வள்ளலின் மகளெனும் புதுமலர் வல்லி.

10. தந்தை தாய்க்கொரு செல்வநற் றனையையாய்ச் சனித்து
நந்தை யேந்ததன் னத்தையா னயந்தவிந் நங்கை
முந்தை யோர்குலப் பெருமையை யடிக்கடி முன்னிச்
சிந்தை வேறுபட் டிழிந்தன வென்றுமே செய்யார்.

கோச்சகக் கலிப்பா.

11. மானமது கெடவரின்முன் வாழாமை மிகவினிதாம்
ஈனமலி கடன்கொளலிற் பசிபொறுத்த லினிதாகும்
வானமிரு துன்புறினு முகமலர்ச்சி யினிதினிதாம்
ஆனஇந்த அரியகுணம் அரிவையவர்க் குரியகுணம்.

12. இகழ்தந்த செய்கையொரீஇ யேன்றவையே செய்துவந்த
புகழ்தந்த எமிலிஎனும் பூவையிவர் கைப்பிடித்தே
அகழ்தந்த இன்பவெள்ளத் தாழ்ந்திவர்க ளொற்றுமையாத்
திகழ்தந்த வில்லறத்தைச் செவ்வணிவ் ணடத்துங்கையில்.

13. தள்ளைகொண்ட பெருங்குணமுந் தந்தைகொண்ட ஞானமுமே
கொள்ளைகொண்ட மூர்த்தியெனக் குவலயத்தோர் கொண்டாடப்
பிள்ளைகொண்ட பெருந்தகையார் பிறங்குமொரு சுபதினத்திற்
கிள்ளைகொண்ட சொற்கொடியைக் கருவுயிர்த்துக் கீர்த்திபெற்றார்.

14. நிலையாத வூனுடலின் சேர்ந்துமிக வருத்துகின்ற
தொலையாத பிணியையெலாந் தொலைத்துமிகப் புகழெடுத்தேம்
மலையாத வுயிர்நலியு மாயையெனு நோய்தவிர்க்கக்
கலையாவுங் கற்றுவல்ல காரிகையைத் தருவமென.

15. மேவாத விரதமெலாம் விழைந்திழைத்த தவப்பேறாய்
மூவாறு நூற்றினொடு முன்பயில் நாற் பத்தேழின்
ஓவாத அக்டோபர் ஒன்றினந்திவேளையினிற்
றாவாத கற்புடையார் லண்டன் நகர் தனிற்பிறந்தார்.

## II—கன்னிப்பருவம்.

16. பற்பலவாந் தருமமெலாம் பாவையுரு வாய்த்திரண்டிங்
குற்பவமா யினவென்ன வோங்குமெழிற் பெண்மணியைப்
பொற்பநலுங் கரத்தேந்திப் பொங்கிவளர் காதலொடுங்
கற்பகமே யெனவழைத்துக் கண்ணுள்வைத்துப் போற்றிவந்தார்.

17. தாலாட்டிப் பாராட்டித் தருபுனலான் மேலாட்டி
வாலாட்டி வரும்பூனை விளையாட்டின் மகிழ்காட்டிக்
கோலாட்டி விழுமலரைக் கொண்டுவந்து சீராட்ட
நாலாட்டின் பருவமுற்றார் நல்லறத்தின் முளையானார்.

18. வையமிசை யுயிர்செழிக்க மாண்பொருளி னுண்மையெலா
மையமுறா தெடுத்துரைக்கு மாதரத்தா லன்னையெனக்
குய்யமிலார் வைத்தபெய ரேதுவெனக் கொண்டநல்லார்
நையவொரு பெருந்துயர மிடைவந்து நண்ணியதால்.

19. நேசத்திற் கொருவரென நின்றதந்தை யோர்திவசம்
காசத்தி னிறந்தவொரு களேபரத்தைக் களைபொழுதில்
நாசத்தின் வினையுலப்பக் கைப்பிடித்த வாள்நழுவி
வீசத்தன் விரலறுந்து சிலநாட்பின் விளிந்தனரால்.

## அறுசீர் விருத்தம்.

20. அருமந்த நாயகனு மிறத்தலுமே மக்களொடு
மாரோச் சென்று
தெருமந்த மெல்லியலார் மனவன்மை சிதைவிலராய்ச்
சிநேகர் சில்லோர்
தருமந்த வுதவியின்வாழ்ந் தரியமகன் றனைப்பயிற்றித்
தந்தைக் குற்ற
கருமந்தன் கருமமிரண் டினையுமுற்றிப் பத்தாண்டு
கழித்தா ரன்றே.

21. இவ்விதமாய் வாழ்பொழுதி லேழெட்டு வயதுசென்ற
எழிலார் அன்னி
செவ்விதரும் பொழிலிடைப்புக் கலர்பறித்துக் கிளைகடொறுஞ்
சென்று தாவி
ஒவ்வியபைங் கொடிகடமை யூசலெனச் சமைத்ததன்மீ
துட்கார்ந் தாடித்
திவ்வியசொன் மலிந்தசோர்க்க நீக்கமெனு நூல்படித்துத்
தேர்ந்தா ரன்றே.

22. மலர்ப்பொழிலே அன்னியெனு மாதரசிக் ககமுவந்த
மனையா நல்ல
மலர்ப்பொழிலே விளையாட்டுப் பயின்றிடற்குத் தக்கபடி
வாய்த்த தானம்
மலர்ப்பொழிலே நூல்பலவு மாய்தரநற் கழகங்கண்
வளர்வ தற்கும்
மலர்ப்பொழிலே யினியபள்ளி மலர்க்குணத்தாள் மலர்சேர்தல்
மரபே யன்றோ.

23. அன்னைமடி விட்டிறங்கா தரியமக ளாய்வளர்ந்த
அன்னி யாரை
முன்னைநல்லூழ் அடைந்ததனுன் மேரியேட்டேன் றுரைக்குமன்பின்
முதிர்ந்த மாது
தன்னையுற்றுக் கலைபலவுங் கற்றிடுவான் றமையனுயர்
தாயி னீங்கிப்
பொன்னைநிகர் பொற்புடையார் தாய்மொழியைத் தலைக்கொண்டு
போயி னாரால்.

24. புனமிருக்கு மிடமுதலாப் பலவிடத்துந் தனித்தனியே
போக்கிப் போக்கி
மனமிருக்கு நிலைக்கேற்பப் பலவழியால் மேரியேட்டு
மாதுணர்த்தக்
கனமிருக்குஞ் சமயநூல் பற்பலவு நனிதேர்ந்து
கருணை யென்னுந்
தனமிருக்கு மாகரமாய்த் தநயத்தை விட்டுதவத்
தலைப்பட் டாரால்.

25. அன்னமே! யெனவழைக்கு மார்வமொழி தானுஞ்செவிக்
கமரா வண்ணம்
பின்னமே வுறுவகையின் மனஞ்செலுத்திக் கலைதேர்ந்து
பிறங்கு நாளில்
நன்னர்மே வியதலங்கள் காண்பதற்கு மேரியேட்டு
நயந்த தோர்ந்து
முன்னமே பலதலத்தும் வழங்குமொழி யறிந்திருந்தன்
முன்பா மென்ன.

26. மாட்சியுறும் பொருளணியுஞ் சொல்லணியு மிகமலிந்து
வகுத்த வெல்லாம்
ஆட்சியுறும் படிக்கான லாட்டினொடு மிகவெளிதாய்
அகத்த வன்றிக்
காட்சியுறும் புறப்பொருளுங் கண்டாங்கு சொலத்தக்க
கனிந்த ப்ரேஞ்சும்
நீட்சியுறும் வேதாந்த நிறைந்தொளிரும் ஜர்மனுமே
நிரம்பக் கற்றார்.

27. ஊட்டுதற்குத் தாயாகி யுணர்த்துதற்குத் தந்தையுமா
யுடன்சேர்ந் தின்பம்
ஈட்டுதற்கு மனமிசைந்த தோழியுமா மேரியேட்டோ
டெக்குஞ் சென்று
காட்டுதற்குக் கலையாய வோவியமுஞ் சிற்பமுமுன்
கண்ட கண்ணை
மீட்டுதற்கு நினையாத வியலழகுங் கண்டுமனம்
விரிவுற் றாரால்.

28. மருளெல்லா மனந்தங்கா வகைமாற்றுந் தன்மையதாய்
மறந்து போன
பொருளெல்லாம் புந்திதரும் புத்தகமாய்ப் புவிபுரக்கும்
புங்க வன்பா
லருளெல்லாம் அருள்விக்குஞ் சற்குருவாய்ப் பொருண்மொழியோ
டமர்ந்து நல்ல
தெருளெல்லாந் தெருட்டுவிக்குங் கேமதிற் றேர்ச்சியுற்றுச
சிறப்பு முற்றார்.

29. பாடல்கொண்டு பரிமளிக்கும் பாரிஸ்ஸூ நகரையுற்றும்
பாலுக் கேகார்
மூடர்கொண்ட மனமுழுதும் கவர்ந்துகவர் வழிப்படுத்த
முயற்சி செய்து
வேடர்கொண்ட வலையென்ன வயின்றெறுமார் நாடகத்தை
விழித்தும் பாரார்
சீடர்கொண்டு பிரமவித்தை நாட்டவந்தார்க் கிவற்றின்மனஞ்
செல்லு மேயோ.

30. மடன்கொண்டு பதுங்கிவரும் வாலிபராம் வல்வெருகின்
வாயி னின்றும்
உடன்கொண்டு வளர்த்தபசுங் கிள்ளைகளை மேரியேட்டிங்
கோம்பல் செய்து
கடன்கொண்டு செய்வசெய்தே னினிநீவிர் கல்வியெனுஞ்
சிறைவி ரித்துத்
திடன்கொண்டு பறந்திடுமி னெனவுரைத்துத் தாயரிடஞ்
சேர்த்துச் சென்றார்.

## III—வியாசம்.

### வேறு.

31. இந்த விதமாய்த் தாயரொடு மியைந்து மகிழ்ந்து வாழ்பொழுதின்
மந்தத் தென்றல் வீசிவரும் வசந்தப் பருவத் தீஸ்டர்வாரச்
சொந்தத்தன் னூர்க்கணிமையதாய்த் துலங்குமொருதேவாலயத்தைத்
தந்தப் பதுமை யெனுமெழிலார் தாழ்வான் கருதிச் சென்றனரால்.

32. அவ்வா லயத்தி லுபதேசி யானோர் மேனாட் கேம்பிரிட்ஜில்
செவ்வேகலைகள்கற்றுவல்லதிறலோர்பிராங்குபேசன்டெனும்பேர்தீ
துவ்வாக் குணத்தி னொருவர்தமைத் துப்புங் கனியுந் தோற்றவிழ்ச்
செவ்வாய்மடந்தையெதிர்நோக்கிச்சிந்தைமகிழ்ந்துகேண்மையுற்றார்.

33. முற்றுப் பருவத் தவரோடும் முத்த மூரற் றொடிக்கைமனம்
பற்றுக் கனிந்து பலபகலாய்ப் பழகி யழகி கலந்ததனை
நற்றாய் அறிந்து முகிற்படலம் நறுந்தண் பொழியு மதியமதில்
உற்றார் பலர்வந் துவகைகொள வுயர்வாய் மணத்தை முற்றுவித்தார்.

34. ஒத்த காதன் மனங்கலந்த வொள்வாள் விழியு மாண்டைகையும்
புத்தம் புதிய போகமெனும் புகழ்செய் புணரி யிடைமூழ்கி
நித்தம் பெருகு மன்பினராய்ப் பாலுக் தேனு நேர்ந்ததுபோற்
சித்த மகிழ்ந்தோ ரீராண்டு செல்லக் கழித்து வருநாளில்,

35. காமக் கனிந்த கனியென்னக் கனமார் குழலி கருத்தரித்து
வாமங் கனிந்த மகன்றனையு மழலை மொழியான் மனமுருக்குந்
தாமங் கனிந்த குழலியையுஞ் சுபமார் தினத்திற் கருவுயிர்த்துச்
சேமங் கனிந்த பொருளென்னத் தினமோர் மேனி யாய்வளர்த்தார்.

## IV—மனக்குழப்பம்.

36. பொன்னே போல மக்கடமைப் போற்றிப் புனைந்து வருநாளில்
மின்னே யனைய தமதுகொடி மிகுந்த நோயால் மெலிந்திடலும்
என்னே! என்னே!! யிம்மகவு மிழைத்த பாவ மெனவிரங்கிக்
கொன்னே புகலு மீசனுண்டேற் குளிருங் கருணை யவற்கிலையோ.

37. என்னுப் பலவு மழுதரற்றி யேங்கி யேங்கி மனமுடைந்து
மன்னு வுலகை யளிக்குமொரு மானுப் பொருளு முளதென்ப
துன்னு துரைக்கு மவர்கொள்கை யுண்மை யுண்மை யெனத்துணிந்து
பன்னுட் பயின்ற ஆஸ்திகத்தைப் பற்று தெதிரா மதம்புகுந்தார்.

38. கருத்த னொருவ னில்லையெனுங் கடையா மதத்தைப் பற்றிமத
விருத்த மான நூல்களையும் விரிவாய்ச் சமய நெறிவிளக்கும்
பொருத்த மான கலைகளையும் புந்தி செலுத்தி யாய்பொழுதிற்
றிருத்த மாகித் தெளியாத தியக்கம் பலவுண் டாயினவால்.

39. துன்று மனத்துக் குழப்பமெலாந் துடைப்பானறிஞர் பற்பலர்க்கும்
நன்று நிருபந் தீட்டியவர் நயந்து விடுத்த விடைகடமில்
ஒன்று மவற்றை மகிழ்ந்தேற்று மொன்று தாயின் மறுப்பெழுதி
வென்று மெங்கண் மாதரசி மெய்ம்மை விளக்கி விளங்கினநால்.

40. சருகு வீழ்த்தித் தருவெல்லாந் தளிர்க்குங் கால மாங்கதனிற்
பெருகுகாதலன்னையொடும்பிறங்குஸென்ட்ஜார்ஜ்ஹால்வயிற்சென்
றுருகு மாறு வாய்ஸியென்பா ருரைக்கு நீதி மொழிகேட்டுத்
திருகு கருத்துச் சிலதிருந்திச் சிறிது மதத்திற் பற்றுவைத்தார்.

## எழுசீர்ச் சந்த விருத்தம்.

41. வெற்பு நேர்தரு தோளி னார்மிகு வாளி னாரொளி வெள்ளிபோற்
பொற்புவாய்ந்தொளிர்குஞ்சிசேரரிபோன்மெனத்தகுசென்னியார்
கற்பி னன்னல மாத ரார்க்கொரு காத லார்பெயர் ஸ்காட்டேனும்
அற்பி னாரொடு கேண்மை யாக்கினர் அன்னி யார்தமை வாய்ஸியே.

42. நாத்தி கச்சம யத்தை யேபுகழ் ஸ்காட்டி னோடுமிந் நங்கையார்
ஏத்தி யேத்திவி ளம்ப ரஞ்செய யேசு மாமதத் தாபிதப்
பாத்தி யம்பெறு கேள்வ ரானவர் பைந்தொ டையினி யிவ்விதம்
மேத்தி யம்பெறு வேத சிந்தனை வேண்டி டேலென வேண்டவே.

43. அன்னி யாரிசை யாம லேமண வாள னார்முத லானதம்
முன்னை நேயர்க ளைத்து றந்துமு னுண்மை யுண்மையின் முந்தலால்
கன்னி மாமக டன்னொ டும்மிகு காத லன்னைய கத்தினை
புன்னியுற்றனராமெனின்னிதுமுண்மைகொண்டவொர்திண்மையே.

44. ஆங்கு சில்பகல் வாழு மெல்லையி னன்னை யார்வறு மைப்பிணி
வீங்கு மெய்ப்பிணி துக்க மாம்பிணி மேவி விண்ணினின் மேவிடப்
பாங்கு மேவிய வன்னி யார்மிகு பத்தி யோடுச டங்கெலாம்
ஓங்கு மன்பொ டுஞற்றி னாரிடை யூறி லாதுயர் ஸ்டான்லியால்.

45. மாத யாமிகு தாயர் வீதலின் மம்மர் நெஞ்சுக லங்கிமிக்
கேத மேவிய வன்னி யார்தமை யீச னேயிலை யாமெனும்
வாத மேபுரி ஸ்காட்டே னுந்துரை வண்மை யாற்றுயர் மாற்றினார்
சேத நீர்ப்புவி மீது நண்பரி லுண்டு கொல்லொரு செல்வமே.

46. அணிகள் மாறியு மாடை மாறியு மன்னி யார்பொரு ளின்மையிற்
பிணிகள் பற்பல கொண்டு நைந்துறு பீழை மேவிய பெற்றியாற்
பணிகள் செய்துழ லேழை யின்பசி பார்க்க லாதன மீகுவார்
மணிகள்போலிவர்கொண்டநல்லறமாண்பின்மிக்கதென்மாந்தர்காள்.

47. மண்ணின் மன்னுயிர் மாப சிப்பிணி மாற்று வாரினு மற்றுமோர்
கண்ணி யம்பெறு மெண்ண முள்ளவர் காணு தற்கரி தாகுமால்
புண்ணி யஞ்செயல் பூர்வ ஜன்மவி சேட மேபுகல் காரணம்
உண்ணு தற்குண வீந்த பேருயி ரீந்த பேருணர்ந் தோதினே.

## எழுசீர் விருத்தம்.

48. ஆரிய வறங்க ளனுதினம் வளர்க்கு மாயிழை யாங்கொரு தினத்திற்
கூரிய விழியு நேரிய நுதலுங் கோதறு வீரியங் கொழித்துச்
சூரியன்மானவிளங்குமாமுகமுமார்ந்துப்ராட்லாவெனத்தோன்றுஞ்
சீரியரொருவருண்டெனக்கேட்டுத்தெரிந்தவர்கேண்மையுநயந்தார்.

49. புண்ணிய நமது நாட்டினுக் காகப் புகலரும் பாடுகள் பட்டே
எண்ணருமாந்தர்நிறைந்தபேரவையிலேறெனத்தலைநிமிர்ந்தெழுந்து
பண்ணருங்குரலாற்பலவெடுத்திசைக்கும்பண்புகொளவரொடுங்கூடி
நண்ணருங் கொடிய நாத்திக மதத்தை நன்றெனநாட்டுதல்செய்தார்.

50. பன்னிரு வருடம் நாத்திக மதமே பயின்றன ராங்கது முடிவில்
அன்னியமாகியொருதினத்துதித்தேயவிர்மதியெனவளர்ந்துயர்ந்த
மன்னிய பிரம ஞான நற்சபைக்கு வரும்வழி யாயிருந் ததுவால்
துன்னியநிழலின்தண்மைகண்டுவெப்பார்சுடுவெயிலுழந்தவரன்றே.

51. உயிர்களி னிடத்தி லோங்கிய கருணை யுத்தமி யாகலி னுயிரைச்
செயிர்தரு மமரிற் றாக்கினிற் கொடிய தீயுமிழ் பீரங்கி வாயிற்
றுயில்வசப்புரியும்வன்றொழில்விடுத்துத்தூயகல்லூரியைவளர்த்துப்
பயிறரச்செய்தனன்றெனப்பரிவாய்ப்பகர்ந்தனர்பார்த்திபர்சிவப்ப.

52. தொகைவரம்பின்றிமாந்தர்கள்பெருகின்சுடுபசிப்பிணியதிகரித்துத்
திகைவர வருந்தி மாழ்குவ ரென்னுந் தீட்டிய நோல்டனின் நூலை
மிகைவருகுணத்தார்நன்றெனக்கொண்டுவிற்றதாலரசினர்வெகுண்டு
பகைவரவிவர்மேற்குற்றமுமெழுப்பிப்பற்பலவின்னல்கள்புரிந்தார்.

53. இசைபெறுப்ராட்லாஎந்திலையிவர்களிருவரும்பிழைத்தனரென்று
வசைபெறுமாறுமன்றிடைநிறுத்தமனுநெறிவழக்கினைத்திறம்பாக்
குசைபெறு நுனியிற் கூரிய மதியாற் கோபரன் ஆய்ந்திவ ரிருவர்
மிசைபெறுகுற்றமிலையெனவிடுத்தார்மிகுதிரண்மாந்தர்கள்வியப்ப.

54. நாத்திக ரிவரென் றெண்ணுநா யகனார் நலமிகு மக்களவ் வழியிற்
போய்த்திசை யாமை கருதிவல்வழக்குப் பூட்டியே யன்னியாகி வந்து
பார்த்திடு வதுங்கூடாதெனத் தீர்ப்புப் பகர்தர மக்களைக் கொண்டார்
மாத்திகைப் பெய்து மாதரா ரப்பில் வழக்கினாற் காணுற மகிழ்ந்தார்.

55. இன்னணங் காணும் போதெலா மக்கட் கின்னலே நாதனா ரியற்ற
மன்னுயிரனைத்துந்தம்முயிர்போலமனங்கொளுமாதரார்பொறாரா
யன்னவர்க்கணனீத்தொருதாயிலார்க்குலகனைத்துந்தாயெனவ்போற்
றுன்னுபல்லேழைச்சிறுவரைத்தமதுசுதரெனப்போற்றியேசுகித்தார்.

## V—மனத்தெளிவு.

56. உடல்பொரு ளாவி யெனுமிவை கொண்ட தலைவினர்க் கெனவினைந்து
ழைத்த, திடன்மிகு ப்ராட்லா பார்லிமென் டென்னச் செப்பிடுஞ்
சபையமர்ந் ததற்பின், கடல்வளை அயர்லாண் டென்னுநாட் டினுக்
கக் கணிப்பரு நன்மைகள் செயுங்கால், இடமலி பிரமஞானநற் சபை
யெறன் றிருப்பதாக் கேட்டுள மகிழ்ந்தார்.

57. அச்சபைக் காதி காரண மாகி யவிர்பிளவாட்ஸ்கியா மாது
மெச்சிய நன்கு நீட்டிய கடிதம் விழியிணை களிப்புறக் கண்டு
நிச்சலுமவரால்வெளிவருமெல்லாநிருபமுங்கருத்தொடும்படித்தே
யுச்சிதமானவவர்மதக்கொள்கையுயர்வெனவொருவழித்துணிந்தார்.

58. படித்தவர் நாவுங் கேட்டவர் செவியும் பரிமளம் நாள்பல மணக்கும்
வடித்தசெஞ் சொல்லும் மெய்ப்பொருண் மாண்பு மலிந்தபன் னிரு
பமு மாய்ந்து, பிடித்தபுன் மதத்தைப் பொருக்கென விடுத்தே பீடு
செய் உளமெலாங் கவர்ந்து, துடித்தவொ ரன்பு தடித்தெழ வொரு
நாட் டெலங்குறு லண்டன்மா நகரில்.

59. பொறையரு ளன்பு தூய்மையிற் பிறப்புப் போற்றரும் வாய்மையென்
றின்ன, நிறைதருங் குணத்துக் கறையறு சிந்தை நேர்பிள வாடஸ்கி
யைக் கண்டார், மறைதரக்கிடந்தநிதியெதிர்ப்பட்டவறியவராமென
மகிழ்ந்து, முறைதெரி யன்னார்க் ககமிக வுவந்த முக்கிய சிஷ்யையு
மானார்.

### அறுசீர் விருத்தம்.

60. முத்திசெல் நெறியி னின்ற மூதறி வாட்டி பக்கற்
பத்தியின் மிக்கா ராகிப் பணிவொடும் பலநூ லாய்ந்து
நித்திய மான மூல நின்மலப் பொருளைச் சிந்தை
பொத்திய தவத்த ராகிப் பொறையுட னமரு நாளில்.

61. அலைதரு வளமும் வானத் தளவுநீண் டுயர்ந்து வீங்கும்
மலைதரு வளமும் வேந்தன் மகிழ்நில வளமுங் கானின்
நிலைதரு வளமு மோங்கி நெடியவோர் காண்ட மென்னக்
கலைதரு நாவ லோர்கள் களிப்பது பரத கண்டம்.

62. கூவரு மலைகள் வேந்தாய்க் குலவுறு மிமவான் வெற்புத்
தாவரு வடபா லோங்கத் தொடுகட லேனை முப்பால்
மேவரு மாறு கொண்டு மேவலர் கடத்தற் கொண்ணாக்
காவரு மரணே யென்னக் கவின்பெறும் பரத கண்டம்.

63. அறம்பொரு ளின்பம் வீடென் றறிஞர்கள் வகுத்த நாற்பாற்
றிறம்பெறு பொருளை யெல்லாஞ் செவ்விதி னளிக்கும் பன்னூல்
நிறம்பெறக் கொண்ட தெய்வ நெடுமொழி நிறம்பி யெல்லாப்
புறம்புகழ் பரப்புஞ் செய்ய பொன்விளை பரத கண்டம்.

64. வேதத்தின் முழக்க மோர்பால் விரிதரு மங்கல் கற்கும்
நாதத்தின் முழக்க மோர்பால் நயந்தவை பலவு நல்கும்
மேதத்தின் முழக்க மோர்பால் மெய்ப்பொருள் விளக்குங் கீதா
போதத்தின் முழக்க மோர்பாற் பொலிவது பரத கண்டம்.

65. சொற்றிடற் கமையா நன்மை தொகையல துவன்றி யோங்கும்
வெற்றிகொள் பரத கண்ட மேன்மையைச் செவியின் மாந்தி
யுற்றிவண் நெடிது போந்தா ருவகையின் உததிமூழ்கிக்
கற்றிடத் தகுவ மெய்ந்நூற் கடற்கரை கண்டார் மாதோ.

66. நாத்திரம் படைத்த செல்வி நகர்தொறுஞ் சென்று சென்று
நேத்திரந் தந்தா ரென்ன நீண்மறைப் பொருளை யெல்லாந்
தோத்திரம் புரியத் தந்தார் தோன்றிய கருணைக் கெல்லாம்
பாத்திரம் போல்வா ரென்றன் பாத்திர முவப்பார் மன்னே.

67. அழகுவாய் மொழியின் பண்பும் அகங்கனிந் தருகு மன்பும்
பழகுவா ரறிவ தல்லாற் பகர்தலிற் படனென் னேகொல்
குழலினு மினிய தீஞ்சொற் கோதைபாற் கேட்க வேண்டிக்
கழகவாய்ச் சென்று தேர்ந்து களிப்பராற் கற்றோ ரம்மா.

## VI—அறச்செயல்.

### கலிநிலைத்துறை.

68. தேனே வானமு தோசெழுங் கண்டுகே ளித்திரயந்
தானே நேருமென் பான்றனித் தோங்குபொ ருட்பொழிவார்
வானே யாரிவ ரோபிறர் வன்றுயர் மாற்றவந்தார்
நானே சொல்லவல் லேனிவர் நல்லற மாண்பினையே.

### எழுசீர் விருத்தம்.

69. நாட்டினி லுயர்ந்த நகர்பல விடத்து நமதரு மதத்தினை நாட்டிப்
பீட்டினி லுயர்ந்தபெருந்தகைமா தர்பீழைசெய்மாயையிற்பிழைத்து
வீட்டினை விழைவா ரடைவழி யாகி விளங்கலாற் பேர்அடையாறுய்ப்
பூட்டிய பெருமை பொருந்திய தாகிப் புகழ்பெறு சென்னைமா நகரில்.

70. பாட்டளி முரன்று பரிமளம் வீசும் பைம்பொழி லிடத்ததா யறிஞர்
ஈட்டிய செல்வ மாகிய பனுவ லெத்தனை யத்தனை யெல்லாந்
தீட்டிய மொழிக ளெவற்றினுங் கொண்டு சிறந்ததாய்த் தேவர்தஞ்
சபைபோற், காட்டிய தூய்மை களிநடம் புரியுங் கழகமுற்றுயிடைக்
களித்தார்.

71. சில்பகலாங்கணினி துறைந்தனராய்த்தென்றிசைககரெலாம்போந்து
பல்பிர சங்கஞ் செய்தனர் மீண்டு பாரினி னெடியநன் னதிபாய்ந்
தொல்வள மெவையுந் தன்னிடை யடக்கி யோங்குறு நவநவ மான
நல்நெடும்பொருளைக்கண்டிடுஞ்சுதந்ரநாடெனுமமெரிக்காசென்றுார்.

72. அந்தமா நாட்டின் முக்கிய நகரா யவிர்சிகா கோவெனு மிடத்தில்
எந்தமா நாட்டி னறிஞருங் கூடி யினியிலை யிதற்கிணை யென்ன
வந்தவோ ரவைக்க ணுரிய மதமே யேற்றமென் றேவருங் கொள்ள
இந்தமானாட்டிப்புகழ்மிகப்படைத்தாரிங்கிதிற்பேறும்வேறுளதோ.

73. இன்னமுமிவர்செய்நன்மையையெல்லாமியம்புவனெனினரிதாகுஞ்
சொன்னமு மணியுந் துறைதொறுங் கொழித்துத் தோய்குவார் பவ
ப்பிணிதொலைக்கும், நன்னர்செய் கங்கைக் கடவுணன் னதிபாய் நளி
னமாங் காசிமா நகரில், மன்னிய வேத சாலையொன் றியற்றி மாண்
புகழ் நிறுத்தினர் மாதோ.

74. உத்தம தீர்த்தம் உத்தம மூர்த்தி யுத்தம தலமெனத் தேர்ந்து
உத்தம மான பாத்திரர்தங்கட் குத்தம வறங்களி னெல்லாம்
உத்தம மான வுபர்மொழி வேதத் துண்மையை விளக்கமுன் வந்த
உத்தமியான விவரினுஞ் சிறந்த உத்தம ராகுவா ரெவரே.

வாழி.

சீராய பிரமஞா னச்சபைகள் வாழியனு தினமும் வேத
பாராய ணஞ்செய்பு மந்தணர்கள் வாழியுயர் பசுக்கள் வாழி
நாராய ணக்குரிசில் வாழியன்னி பேஸண்டென்னு நங்கை வாழி
மாராய ராயர்புகழ் விக்டோரி யாமாது வாழி வாழி.

---

## நன்மொழி.

111. முமுட்சுத்துவம்—மோக்ஷம் பெறுதலில் தீவிரமான ஆசை. உலகை முற்றும் துறத்தல். அந்த லக்ஷியத்தைத்தவிர வேறு நினைப்புக்கொள்ளாதிருத்தல் அறையில் தங்கக்கட்டி இருக்கிறது என்பது திருடன் ஒருவனுக்குத் தெரிந்திருக்குமாகில், இராக்காலம் வந்தமேல் எப்போதும் அந்நினைப்பாய் இருந்து அதை கைப்பற்றும் உபாயத்தை நாடியே இருப்பானே, அவ்விதம் முமுட்சு வானவர் இருத்தற்பாலர்.

## * 'வெள்ளியம்பலம்' என்னும் ஞானிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்.

(187-ம் பக்கத் தொடர்ச்சி.

---

8. மேற்கண்ட வெள்ளியம்பலத்திலிருந்து தெய்வத்தன்மை பொருந்திய ராஜாக்கள் உலகில் வெளிவந்திருப்பதும் தவிர, சமயா சாரியர்களும் ஞானகுருக்களும் வெளிவந்துலகத்திற் றோன்றியிருக் கிறார்களென முன்னரே யான் பிரஸ்தாபித்துள்ளேன். மதம் அல் லது சமயமென்பது ஈசுவரனாலேற்படும் ஞானமுறையின் வியவஸ் தையாம். ஈசுவரனை யன்பால் ஜநங்கள் தேடுகின்றார்கள். இவ் வெள்ளியம்பலமானது ஈசுவரனது ஞாந சக்தி பிரகாசிக்கும் முக் கிய ஸ்தாநமாகையால், அதினின்று ஞாநத்தை யடங்கப்பெற்ற சமயமுறை யொவ்வொன்றும் வெளிவந்திருக்கின்றது. மதம் என் றால், ஜநங்கள் உருப்போடும் கிரியாமுறைகளின் வெறும் தொகுதி யன்று, புரோகிதர்கள் நடத்துகின்றவும் பொது ஜநங்கள் பார்க்கின் றவுமான நாநாவிதமான கர்மங்களல்ல, சமயமுறை சாத்திரங்கள் எவ்வளவு உயர்வுள்ளனவாகவும், எவ்வளவுக்கு மநத்தையுத்ஸாகப்ப டுத்தக்கூடியனவாகவும், எவ்வளவு சிரேஷ்டமானவை யாகவும், இருந் தாலும், அச்சாஸ்திரங்கள் மதங்கள் ஆகமாட்டா. ஆனால் 'மதம்' என் றால் ஜீவாத்மா எவ்விடமிருந்து வெளிப்பட்டதோ அந்த மூலவஸ் துவான பரமாத்மாவை நோக்கிய தாகமுள்ள முறைப்பாடாகும்; உலக ஆசாபாசங்களிலகப்பட்டுத் திகைப்புற்ற ஜீவாத்மா அதன்மூலப் பொருளாகிய பரமாத்மாவை நோக்கிச்செய்யும் பிரார்த்தனையாகும்; மானிடரின் ஹிருதயம் இறைவனைத்தேடி நாடுதலாம். "இறைவா! தாகமுள்ள மான் நீரோடையை நாடிச் செல்லுமாறுபோல், என் மநம் உன்னை நாடுகின்றது" என்ற ஹிப்ரூ ஞானியாரின் மொழி இங்கு கவனிக்கத்தக்கது. சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, மதம் என்பது ஈசுவரத்தன்மையை நாடும் மநத்தின்கண் என்றும் உண்டாகும் தாகமாம். அஃது, ஈசுவர சாக்ஷாத்காரம் அதாவது மெய்யுணர்வு என்ற ஞாநஜலத்தைப் பாநம்பண்ணினாற்றான், தீரும்.

9. உலகத்தில் தோன்றியிருக்கின்ற பல மதங்களும், மூத்த சகோதரர்களான ஞாநகுரவர்களால் அறிவில் ஏழைகளான ஜநங்

களாகும் பாலர்கள் உய்யுமாறும், நல்வழிப்படுமாறும், அவர்களுடைய புத்திகளின் தகைமைக்குத் தக்கவாறு எளிய தெளிவான பாஷையில், ஏற்படுத்தப்பெற்றுள்ளன. அதனால், ஒரு மூலமனிதவர்க்கத்தினின்று உட்பிரிவுகளான சிறுசிறு கூட்டங்கள் செழிப்புள்ள காலியிடங்களை நாடி யங்கே ஸ்திரமாக வஸிக்கப்போகும் காலத்தில், மனிதவர்க்க ரக்ஷகர்களான இவ்வெள்ளியம்பலத்தினின்று ஒரு ஞானகுருவும், அந்தந்த உள் வகுப்பினர்க்கு அவ்வக்காலத்திற்கும் அவரவர் புத்தியின் நுட்பத்திற்கும் ஏற்ப, பிராசீந சத்தியமுறையை உபதேசித்து அவ்வவர்களைநல்வழிப்படுத்தும்படி அனுப்பப்படுவார்.

10. மேற்கண்ட மூல பெரிய ஆர்ய வர்க்கத்தினின்று இரண்டாம் உள்வகுப்பினரான ஆரியவர்க்கத்தினர் அரேபியா தேசத்திற்கும் ஆபிரிக்கா கண்டத்திற்கும் அனுப்பப் பெற்றார்கள். அவர்கள் தெற்குநோக்கிச்சென்று 'தென்னாப்பிரிக்காவில்' பெரிய ராஜாங்கத்தை ஸ்தாபித்தார்கள். இவர்களுக்கு ஞானகுருவாக அவ்வெள்ளியம்பலத்திலிருந்து ஒரு மகாபுருஷர் தோன்றி இவர்களை நல்வழிப்படுத்துவாராயினர். 'எகிப்து' தேசத்தில் 'தாத்' ('Thoth') என்ற திருநாமம் அவர் பெற்றார். பின்னர் 'கிரீஸ்' தேசத்தில் 'ஹேர்மிஸ்' ('Hermes') என்ற பெயர் பெற்றவரும் அவரே. அவர் செய்த உபதேசம் ஜ்யோதிஸ்ஸைப் பிரதீகப்படுத்தி அவ்வுருவகத்தைப்பற்றியமுறையாக நடைபெற்றது. ஆதிபூர்வவாசஸ்தானத்தில்'ஆரிய' வர்க்கத்திற்குச்செய்யப்பட்ட உபதேசம் என்னவென்றால்"ஆத்மா ஒன்றே, அவன், ஆதித்தனிலுள்ள புருஷன். ஜீவாத்மாக்கள் யாவும் அவ்வாதித்தனின் பல ரச்மிகளாம்"-இதேயுபதேசமானது இந்தவிரண்டாம் ஆரியவர்க்கத்தினர்க்கு ஜ்யோதிர்முகமான வித்தையாகமேற்கண்ட ஞானகுருவான'ஹர்மீஸ்'என்பவரால் உபதேசிக்கப்பெற்று வந்தது. அவர்உபதேசமிதுவாம்:"சுவர்க்கத்தில்ஜ்யோதிஸ்இருக்கின்றது. அந்த ஜ்யோதிஸ்ஸே ஒவ்வொரு மனிதனின் ஹிருதயத்தையுறைவிடமாகக்கொள்ளுகின்றது. ஸ்வர்க்கத்திலிருக்கின்ற ஜ்யோதிஸ்ஸும் ஹிருதயத்தின் கண்ணுள்ள ஜ்யோதிஸ்ஸும் இரண்டல்ல, ஒன்றேதான். மனிதர்கள் தங்கள் ஹிருதயத்தின்கண்ணுள்ள ஜ்யோதிஸ்ஸை சாக்ஷாத்கரிப்பாராகில், பின்னர் மண்ணிலும் விண்ணிலும் எங்கும்

அதையேதான் காண்பார்.” இவ்வுபதேசம் பழமையான வுபதேசமே. முன்னர் சூரியனென்ற பிரஸ்தாபமிருந்தது. இப்போது அதன் ஸ்தானத்தில் ‘ஜ்யோதிஸ்’ என்ற பிரஸ்தாபம் வருகிறது. இந்த ஒன்றுதான் வார்த்தையின் வித்தியாசம்.

11. பின்னர் ஷ பெரிய ஆரியவர்க்கத்தினின்று 3-ம் உள்வகுப்பினர் வெளியேறிப் பாரசீகதேசத்தைக் கைப்பற்றிப் பலமான பாரசீக ராஜாங்கத்தை ஸ்தாபித்தார்கள். அது கி. மு. 30,000ம் ஆண்டு தொடங்கி கி. மு. 2,000ம் ஆண்டுவரை உலகில் நிலைத்துச் செழித்துத் தங்கியிருந்தது. அப்பாரசீக ஜாதியாருக்கு கி. மு. 27,000 வருஷங்களுக்கு முன்னர், முந்திய பாராவில் பிரஸ்தாபிக்கப்பெற்ற ஞானகுருவே அஜ்ஜாதியாருக்கு ராஜாங்க முறையையும் ஞானவொழுக்கமுறையையும் கற்பிக்கும்படியாக, அவ்வெள்ளியம்பலத்தினின்றே யனுப்பப்பட்டார். இப்போது அவர் பெயர் ‘ஜாராதுஷ்ட்ரா’ என்பதாம். அவர் உபதேசம் யாவும் ஈசுவரனையக்நியாகப் பிரதிகப்படுத்தி அது சம்பந்தமான உருவகமாக நிகழ்ந்தது. ஆதியில் உபதேசித்துள்ள சத்தியமே இப்போது ‘அக்நி’ யென்ற கோசத்தைப் பெற்றதுபோலும். எல்லா மகாபூதங்களிலும் ‘அக்நி’ மகா பரிசுத்தமானது. யாவற்றையும் புனிதம் செய்யுமியல்பினது அது தெய்வத்தன்மை பொருந்தியது. சுவர்க்கத்திலுள்ள அக்நியும் பலிபீடத்தில் ஜ்வலிக்கின்ற அக்நியும் மனிதன் ஹிருதயத்தில் ஜ்வலிக்கின்ற அக்நியும் ஒன்றே. அவர் அக்நியுபாஸகர். அவர் வந்த வேலை முடிந்தமேல், விண்ணினின்று வித்யுத்(மின்னல்)மூலமாய் அக்நியைப்பெற்று மேகம்போன்ற அக்நிமயமான விமானமேறி, மனிதர்பார்வையைவிட்டகன்றார். ஆயினும், அவரேற்றின அக்நி அவர்சமயத்தினர்களின்கண் இன்றும் அணையாமலிருந்து வருகிறது. அவர் ஸ்தாபித்த மதத்தையநுசரித்து ஒழுகுபவர் இன்றும் உள்ளார். அவர்கள் அக்நி சம்பந்தமான அவருடைய ஞானமொழியை இன்றும் சிந்தனைகொள்ளுகின்றனர். அவர்களுடைய அக்நியாலயங்களில் புதிதாகயாதொரு அக்நியும் உண்டுபண்ணப்படுகிறதில்லை. வேண்டுமென்றால் விண்ணின்று மின்னல் ரூபமாக அக்நி யாதேனும் ஒரு மரத்தைத்தாக்கி அது எரியவும், அவ்வெரியும் மரத்தினின்று கிளம்பி வற்றப்பட்ட

அக்நிதான் அவர்களின் ஆலயங்களில் ஸ்வீகரிக்கத்தக்கது, உபாஸாநார்ஹமாக ஸ்தாபிக்கத்தக்கது. இத்தகைய சம்பவம்நேரிட்டு அதன் மூலமாய் அக்நி யேற்றப்பெறுதலுக்காக எத்தனையோ அக்நி யாலயங்கள் இம்மதஸ்தர்களுக்குள் வருஷக்கணக்காய்க் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆதியில் அவர்களுடைய பரமாசாரியரான'ஜாரதுஷ்டரா' என்பார் தம்முடைய திவ்ய கரத்தை நீட்டி அதன் மூலமாய் விண்ணினின்று அக்நியை வருவித்து அவ்வக்நியைக்கொண்டு பலிபீடத்தின் சேர்க்கப்பட்டிருந்த சமித்துக்களை நெருப்புமூட்டினார். முன்னர் அவர் உபாஸித்த முறையைத் தழுவி இக்காலத்திலும் அவர் சமபத்தார் நடைபெற்று வருகின்றார்.

12. பின்னர், இன்னும் மற்றோர்விதமான நாகரிக மமைந்தையைப் பார்ப்போம். அது 'ஐரோப்பா' கண்டத்தின் பிரஞ்ஞாபூமியில் ராஜ்யபாரம் செய்து நடைபெற்றது. அந் நாகரிகத்தால் 'ஐரோப்பா' கண்டத்திற் கேற்பட்ட இலக்கியங்கள் இன்று மிருக்கின்றன. அவ்வாக்கியங்களின் வனப்பை யநுசரித்து நடைபெற 'ஐரோப்பிய' அறிஞர்கள் இன்னும் முயற்சியுள்ளார். அந்நாகரிகம் 'கிரீஸ்' தேசத்தைப்பற்றியதாம். 'கிரீஸ்' தேசத்தில் அஃதுஉயர்வு பெற்றிருந்தகாலத்தில், அச்சாதியாரின் புத்திநுட்பத்தால் அழகான கட்டிடங்கள் அமைக்கப்பெற்றன. தற்காலச்சிற்பசாஸ்திர வல்லுநர் அம்மாதிரி செய்கின்றதற்கு முயலுகின்றார்களே யொழிய அவைகளை மேற்போகுந் திறனற்றவர்களா யிருக்கின்றனர். 'கிரீஸ்'தேசத்தில் அநேக கம்பீரமான தத்துவஞாநிகள் உண்டானார்கள். 'ஐரோப்பா' கண்டத்தில்இருந்தவர்களும், இருக்கின்றவர்களுமான தத்துவசாஸ்திரிகளும், ஞாநிகளும், 'ப்ளேடோ'என்ற மகாபுருஷனைவழிப்பட்டவர்கள். தாம் அறிஞர் என்று சொல்லிக் கொள்ளுகின்ற தற்காலத்தியர்கள் 'கிரீக்கு' தேசத்தார்களுக்குள் ஞாநமுறையில் உயர்வற உயர்நல மமையப்பெற்ற அம்மகா புருஷனைப் பார்த்து ஒப்பு நோக்கிச் சிந்தனைகொள்ளவே, வெட்கித்தம்மை எரும்புங்கரையான் கள்போல மதிக்கும்படியாக நேரிடுகின்றது! ஐரோப்பியர் நாகரிகமென்று சொல்லப்படும் நாகரிகம் கிரீக்கு தேசத்தார்களால் விப்வஸ்தைப்படுத்தப் பட்டது. அந்நாகரிகத்தின் யஜமாநத்துவம் எவ்விதவாக்ஷேபணையுமின்றி 'கிரீக்கு' தேசத்தின் உரிமையானது.

அந்தக்'கிரீக்கு' ஜாதியார்கள் விருத்தியாகிப் பெருமைபெற்று வருங் காலத்தில், அக்கிரீக்கு தேயத்திற்கு முன் பாராவில் பிரஸ்தாபித்த மகாபுருஷரே திரும்பவும் சரீரமெடுத்து வருவாராயினர். இப்போது காநத்தைப்பற்றியதாய் அவர் உபதேசம் நிகழ்வதாயிற்று. முன்னர் ஜ்யோதிஸையும, அக்நியையும், பற்றியதாக அவருடைய திவ்விய வுபதேசம் அமைந்தது. இப்போது காநரூபமாய் அவர் ஞாந உபதேசத்தைச் செய்தார். தேவர்கள் கூட வந்து கேட்கும்படியாய் அவ்வளவு அற்புதமாய் அவர் காநமுறை விளங்கிற்று. சுலபமான ஒரு சிறு வாத்தியத்தினின்று அற்புதமான காநரஸங்களை வெளியிடுவர். அவைகளின் இனிமையான த்வநிகள் சாதாரண ஜநங்கள் அநுபவிக்கக் கூடாதபடி அவ்வளவு உயர்நலமுடையவைகளாய் இருந்தன. அவர் வாயால் இனிய வசநம் பேசுவர். அப்போதுஅதைககேட்டு ஆநந்திக்கப் பிரபஞ்சமே கும்பகம்பண்ணினாற் போல உலகமுழுமையும் நிச்சப்தமாய்அமைவுறும். அவர் வாய்ப்பிறப்பால்வந்த காநரஸங்களும், வாத்தியத்தினின்று அவரது அங்குலிகளால் உற்பவிக்கப்பெற்ற காநரஸங்களும், கம்பீரமானவைகளாகவும், கேட்போர்மநம் உருகும்படிசெய்யக் கூடியவைகளாகவும், இருந்தன. எகிப்து தேசத்தில் அவர் தோன்றியகாலத்தில் அறிவு என்ற தீவர்த்தியை யேற்றிவைத்து ஆயிரக் கணக்கான வருஷங்களாக அதைக் காப்பாற்றிவைக்கும்படி குப்தமான ஒரு ஞாநசபையை ஸ்தாபித்தார். அதற்கு 'The Great Mysteries' என்ற பெயர் உள்ளது. பின்னர் 'பாரசீக' தேசத்தில் அவா அவதரித்த காலத்தில் ஒரு ஞாநகுப்த சபையை அவ்விதமே ஸ்தாபநம் செய்தார். இந்த ஸபையினின்று தான் 'Magi' 'மாகி' என்ற பெயர்போன ஞாநிகள் கல்வி கற்றுப் பயின்று வெளிவந்தார்கள். அவ்விதமே 'கிரீஸ்' தேசத்தி லிவர் தோன்றிய காலத்தில் 'Orphic mysteries' என்ற குப்த சம்பிரதாயமுறைகளை ஸ்தாபித்தார். அவைகள் மூலமாய் குப்தஞாந முறைகளைக் கற்பிக்கும் வித்தியாசாலைகள் ஏற்பட்டன. அவரால் ஸ்தாபநம் செய்யப்பெற்ற குப்தசாஸ்திர முறைகளே பின்னர் ('Pythagoras') பைதகோராஸ் என்னும் ஞாநியால் நடத்தப்பெற்ற குப்தஞாந வித்தியாசாலைகளுக்கு மூலமாய் அமைந்தன. பைதகோராஸ் என்பாரைப்பற்றி ப்ளேடோ

என்ற ஞானியார் விஸ்தாரமாய்ப் பேசியுள்ளார். அவருடைய வித்தியா சாலைகளிலோ 'கிரீஸ்' தேசத்தின் உயர்தர புத்திமான்கள் கற்று மேன்மை பெற்றார்கள். அவர்களால் உண்டுபண்ணின ஞானவே ஐரோப்பாக் கண்டத்தை யின்றும் உண்பித்துக்கொண்டு வருகிறது.

13. பின்னர் பல காலங்கழிந்தன. உலகத்திற்கு, முன்னேற்பட்ட ஞானோபதேசத்தை யெல்லாம் மேற்போனதும், அவைகளைவிட அதிக கம்பீரமானதுமான ஞான உபதேசம் வாய்க்கும்படியான சமயம் ஏற்பட்டது. இப்போது வடஇந்தியாவில் க்ஷத்திரிய குலத்தில் ஒரு சிசு பிறந்தது. அவர் பிறக்குங்கால் அவர் தொட்டிலைச்சுற்றிப் புஷ்பமாரிகள் பொழிந்து உயர்தர கானம்பண்ணிக்கொண்டு தேவர்களே சூழ்ந்து நின்றார்கள். உலகத்திற்கெல்லாம் ஆறுதலும், தேறுதலுமாகவும், ஞானஜ்யோதிவிளங்கவும், விளங்குமவரை தாயின் மடியிற்பார்த்து தேவர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். அவர் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக பால்யம், கௌமாரம், யௌவனம் என்றதசைகளை யடைந்து பூர்ண மனிதப்பிராய மடைந்தார். இதுகாறும் உலக சம்பந்தமான வியசனம் எள்ளளவேனும் அவர் மனத்தைத் தாக்கினதின்றும். அவர் கண் வியசனமென்ற கண்ணீரால் மங்கியதின்றும். இப்படி நடைபெற்று வருங்காலத்தில், ஒரு சமயத்தில் உலக சம்பந்தமான துக்கத்தின் விம்மிய அழுகை அவர்காதில் விழுந்தது. ஜரை, மரணம், வியாதி, இவைபோன்றவைகளின் கூக்குறல் மேன்மேலும் அவர் காதைத் தாக்கின. அவர் மனத்தைக் கவர்ந்தன. இவைகளெல்லாம் சிந்தனைகொண்டு காருண்ய மேலிட்டவராய் ஒருநாளிரவில் திடீரென்று துயிலெழுந்தார். அச்சமயமே எல்லாராலும் நன்கு மதிக்கக்கூடிய உயர்நலமமைந்த திவ்விய சமயமெனக் கொள்ளற்பாலதாம்! அருகாண்மையில் துயிலுமில்லாளையும் அருமருந்தன்னகுழந்தையையும் தண்ணுற்றார். இல்லாள் முகத்தைக் குனிந்து பார்த்தார். அவர்கள் இருவர்பாலும் ஆசிர்வாதம்பற்றிய சிந்தனைகொண்டார். அவர்களிடமிருந்து மனத்தால் விடைபெற்று, அகன்று வெளியேறினர். சென்றுபோகையில் தொங்கிக் கொண்டிருந்த தனது தலைமயிரை முனையுள்ள தனது வாளால் கத்தரித்து எறி

தார். தனது ராஜாங்க அங்கிகளையும் தவிர்த்தெரிந்தார். குதிரையில் சவாரி பண்ணிக்கொண்டு போனார். பின்னர், தான் மிகவும் நேசித்துவந்த அக்குதிரையையும் துறந்தார். பின்பு ஏகாங்கியாய், கால்நடையாய் உலகத்தின் க்ஷேமத்தின்பொருட்டு சாந்த நிலையை இலக்ஷபித்தவராய் அதை நாடி அங்குமிங்கும் அலைந்தார். பலநாள் அதைத் தேடினார். அதையடையும்பொருட்டுப் பலவாறான விரதங்கள், நோம்புகள் செய்து தன் தேகத்தில் வருத்தமுற்றார். அதனிமித்தம் பல முறைகளைப் பயின்றார். நினைத்த இலக்ஷியம் சித்திக்கவில்லை. எலும்புந் தோலுமாய் இளைத்து அசக்தராகிக் களைப்பால் பூமியில் வீழ்ந்தார். உணவு, ஜலபானமில்லாமல் குரூரமான காயக் கிலேசம் பண்ணினார். இதனாலும் மெய்யுணர்வு பெற்றாரில்லை. இங்ஙனம் சோர்வுற்றிருக்கும் நாளில், ஒரு கன்னிகை தன் கரத்தால் பாலுண்டிகொடுக்க அருந்தினார். களைதீர்ந்தார். முன்பலம் திரும்பியது. தான் நாடிய ஞானஜ்யோதிஸைக் காண்பான் மறுபடியும் எழுந்து திரிந்தார். போதிவிருக்ஷம் என்ற ஒரு ஆலவிருக்ஷத்தினடியிலுட்கார்ந்தார். அந்தர்முகப்பட்டுச் சமாதிகொண்டார்; ஞானபூமினை உசாவினார். அக்காலத்தில் பலவிதமான சோதனைகளான ஆசாபாசங்கள் இவரைத் தாக்கின. தானில்லாள் தன் முன்னின்று அழுகிறதுபோலவும், தனது குழந்தை தன்முன் விம்மி விம்மி யழுதல் போலவும், தன்பிதா தன்முன்னர்வந்து "ராஜாங்கத்தைப் பெறுவாய்" என்று மிகுந்த ஆவலுடன் தன்னை வருந்துவதுபோலவும், இவைபோன்ற பலவிதமான உலக காமனைகளும் ஆசாபாசங்களும் அவர் புத்தியைப் பேதிக்கப் பலவாறு முயன்றன. அவர் தீரராய் இருந்துகொண்டு இவைகளில் உபேக்ஷையுள்ளவராய் ஒருநிலைமநமுள்ளவராய் ஞானசமாதி கொண்டார். கடையில் பளிச்சென்று ஒரு தேஜஸ் அவர் மநத்தில் தோன்றியது. மநக்கண் திறக்கப்பெற்றார். துக்ககாரணம், அதை நீக்கும் முறை இவைகளை அறிந்துகொண்டார். தேவர்கள், இப்போது இவரைச் சூழ்ந்தனர். உலகசிருஷ்டி கர்த்தராகிய நான்முகனே இவர்முன்னர் தோன்றி இவர்கண்ட ஞானஜ்யோதியின் வழிபற்றி யொழுகவேண்டுமெனப் பிரார்த்தித்தார். சிலநாள் கழிந்தமேல் திவ்ய தேசமாகிய காசிநகர்க்குச் சென்றார். தான் கண்டுபிடித்த ஞானமுறையை, தர்மபதத்தை, உலகத்தாருக்கு

அறிவுறுத்த வேண்டுமெனக் கருதி உபந்நியாஸம் செய்தார். இவ்விதமாய் அவருடைய திவ்யமான பாதங்கள் இந்தியா தேசத்தின் காடுகள், நாடுகள் எல்லாவற்றிலும் சென்றன. அவர் போனவிடங்களெல்லாம் அறிவிலிகளான உலகத்தார்க்கும், துக்கத்தில் மூழ்கியிருக்கின்ற அறிவிலிகளுக்கும், அவர்களுய்யுமாறு தம்முடைய திவ்யவாக்கால் ஞானமுறையைப்பற்றிய உபந்நியாஸங்களை, யுபதேசித்துவந்தார். இவ்விதமாய் ஞானமுறைகளை இச்சரீரத்தைக்கழற்றிவிடும்வரை (80ம் வயசுவரை) செய்துவந்தார். பின்பு சரீரம் நீத்தமேல் உயர்தரதிவ்ய லோகங்களுக்குச் சென்றார். அங்கிருந்து இன்னும் மானிடவர்க்கத்திற்கு அது நலம்பெறும்படி ஞானவெள்ளமும் வரம்புகடந்தகருணை வெள்ளத்தையும், இப்பூமிக்கு வந்துகொண்டிருக்கும்படிசெய்துகொண்டுவருகின்றார். இவர்தான் 'சித்தார்த்தர்' என்ற புண்ணியபுருஷர். இவரைத்தான் பகவான்புத்தர்' எனக் கூறுவர். *

14 வெள்ளியம்பலத்தின் ஞானதூதராகவும், ஞான குருவாகவும் இதுவரையில் உலகத்திற்கு நேரில் அவர் செய்துவந்த கைங்கரியம் முடிவுபெற்றது. உயர் நலமமைந்த உயர் ஸ்தானத்தை அடைந்துவிட்டார். இனி அந்தஸ்தானத்திலிருந்து உலகிற்குத்திரும்பும்படி எவரும் அவரை ஏவவொண்ணாது. தானிதுகாறும் வகித்துவந்த கம்பீரமான ஜகத்குருஸ்தானத்தை, தன்னிடம் லக்ஷக்கணக்கான வருஷங்களாய் ஞான நெறியில் நடைபெற்றவரும் 'மைத்திரேயர்' என்ற திருநாமம் பெற்றவரும், இனி காருண்ணியமூர்த்தியான புத்தராகவே ஆகப்போகிறவருமான தம் அருமையான ஞான சகோதரரிடம் ஒப்புவித்துவிட்டார். இந்துக்களுடைய புராணங்களிலும் மகாபாரதத்திலும் பன்முறை பிரஸ்தாபம் பெறும் மஹர்ஷியாகியவர் இந்த மைத்திரேயரேயாவர். இவரோ மகாசாந்தர், மகாவலிமைபெற்றதீரர். இவர்தன்னுடைய அன்பின்மிகுதியால், ஒப்பற்றகாருண்ணியபலத்தால், உலகத்திற்குக் கைங்கரியம் செய்யவேண்டுமென்ற சிந்தனைகொண்டவராய், அக்காலத்தில் எல்லாஜாதியராலும் தள்ளுண்டவரான யூதர் ஜாதியில், 'ஜூடியா' என்ற சிறு

* மணிமேகலை என்ற நூலில், இவர் பெருமையைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதைக் கண்டுகொள்க.

நாட்டில், பூர்வம் அவதாரமாயினர். ஜனங்கள், அவர்பால் வைத்த பக்திசிரத்தையால், அவருக்கு(The Christ) கிறீஸ்து என்று நாமகரணம்செய்தார்கள். கிறீஸ்துமதகிரந்தங்களில் அவரைப்பற்றி அடியில் வருமாறு பிரஸ்தாபம் காணப்படுகிறது. "அவர் தன் இனத்தாரிடம் வந்தார். ஆனால் தன்னினத்தார் அவரை அங்கிகரித்தார்களில்லை." அவருடைய அழகான உதடிதட்களினின்று வெளிவந்த ஞானமொழிகளைப்போல, அவருக்கு முன்னர், ஒருவரும் வசநித்தாரில்லை. ஜனங்கள் அக்காலத்தில் அவரைப்பற்றி சிலாகித்துப் பேசியிருந்தாலும், அவருடைய காருண்ணியத்தில் ஈடுபட்டு அவர் நல்வரவை உத்ஸாகத்துடனே ஏற்றுக்கொண்டிருந்தாலும், சாதாரண ஜனங்கள் எவ்விஷயத்தைப்பற்றியும் ஸ்திரப்படாத சஞ்சலமுள்ள மநத்தினராகையால், பின்னர் அவர்களே அவரைக்கொன்றும், அச்செய்கையைப் பற்றிப்பெருமையும்பாராட்டினார்கள்! மூன்றே மூன்றுவருஷந்தான், மௌட்டியம் பெற்று இவ்வுலகம்அவர் தங்கும்படிக்கிடங்கொடுத்தது. அம்மகாபுருஷன் அவதாரத்தை நீண்டகால மங்கீகரிக்கும் படியான பாக்கியம் பெற உலகம் அப்போது அநர்ஹமாயிருந்தது. அவர் குடியிருந்த சரீரத்தை ஹிம்ஸித்துக் கொன்று போட்டார்கள் உலகத்தாரால் தள்ளுண்டவராய்த் தான் வந்தவிடம் போய்ச்சேர்ந்தார். அதுவே அவருடைய ஸ்வஸ்தாநம். அதுதான் மகிமைதங்கிய 'வெள்ளியம்பலம்'.

15. இதற்குப்பின்னர், சிற்சில புண்ணியபுருஷர்கள் (ஆனால் அவ்விதகம்பீரந்தங்கியவர்களல்லர்) உலகத்தின் அபிவிருத்தியின்பொருட்டு அப்போதைக்கப்போது தோன்றுவாராயினர். உலகத்திற்கு ஞாநமுறையிலும் பிரக்ஞாமுறையிலும் நூதந எழுச்சி யுண்டாகும் காலமெல்லாம், இவ் வெள்ளியம்பலத்தினின்று ஒரு புண்ணிய புருஷர் யாவரேனும் உலகிற்றோன்றிடுவர். அவர்மூலமாய் அவ்வெழுச்சியேற்படும். இத்தன்மையான சம்பவம் சமயமுறையைப்பற்றியதாக மாத்திரம் நிகழ்வது அன்றும். அறிவுமுறையிலும் மனிதன் பிறருதவியை வேண்டுகிற காலமெல்லாம், இது நிகழும். இவ் வெள்ளியம்பலத்தி னநுக்கிரஹம் பெற்றவரான தீர்க்கதர்சிகளென்ன, சாஸ்திரங்களில் வல்லுநர் என்ன, யுத்தவீரர்களென்ன, உபாத்தியா

யர்களென்ன, இவர்கள் போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் உலகத்தின் க்ஷேமத்தைக்கருதி ஞானத்தையும் பலத்தையும் அருளுமாறு பற்பல சமயங்களில் தோன்றியிருக்கின்றனர். உதாரணமாக மேனாட்டில் 'ஹுனியாடி ஜேனோஸ், ('Huniyadi Janos') 'பாரசெல்ஸஸ்' ('Paracelsus') 'ப்ருனோ' ('Bruno') முதலியவர்களும், இந்தியாவில் அநேகரிஷிகளும், இந்த வெள்ளியம்பலத்தினின்றும் ஞானதூதர்களாய்த் தோன்றியிருக்கிறார்கள். மேனாட்டில் மதசம்பந்தமாக ஞானகுருக்கள் ஷை வெள்ளியம்பலத்தினின்றும் பல காலங்களில் அவதரித்திருக்கின்றார்கள். இவ்வெள்ளியம்பலமோ உலகத்தின் ஹிருதயஸ்தானமாகும்.

16. ஐரோபாகண்டமானது அஞ்ஞான விருளால் மூடப்பெற்றும், 'கிரீஸ்' தேசத்தின் ஞானவொளியானது மறைந்தும், ஐரோபிய ஜனங்கள் அவிவேகத்துள் ஆழ்ந்தும், சமயமுறைக்கு என்று ஏற்பட்டுள்ள (Church) ஆலயக்குருக்கள் ஞானத்திற்கு ஆதரவாயிருப்பதற்குபதிலாக அதை ஹிம்ஸித்து வதை செய்யத்துணிவுள்ளவர்களாக ஏற்பட்ட காலத்திலும், சமயாசாரியர்களும் புரோஹிதர்களும் ஞானதீபத்தைக் காட்டிபவர்களாக விருப்பதை யொழித்து மௌட்டியர்களாக நடைபெற்ற காலத்திலும், இவ்வெள்ளியம்பலத்திலிருந்து அறிவென்ற விளக்கை மறுபடியும் ஏற்ற 'அராபியா' தேசத்தின் தீர்க்கதரிசியாகிய 'மகம்மதுநபி' என்பார் உலகத்திற்கு அனுப்பப்பட்டார். அவரால் ஏற்பட்ட ஞான ரச்மிகள் உலகமெங்கும்பரவின. அவர் செய்த கைங்கரியம், தன்பிறப்பிடமாகிய 'அராபியா' நாட்டில் ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருந்த துஷ்டர்களான கீழ்க்கடையிலுள்ளவர்களுக்கு, கடவுள் உளர் என்ற சித்தாந்தத்தை யுபதேசித்தது மாத்திரமன்று. யுத்தத்தில் ஜயித்து பெரிய ராஜாங்கத்தை அவருக்குபபின் வந்தவர்கள் ஸ்தாபித்தார்கள் என்பது மெய்யே. அதைவிட மேலான கைங்கரியத்தை 'இஸ்லாம்' மதம் செய்துள்ளது. அதாவது, மேல்நாட்டாராகிய இருள் மூடப்பெற்ற ஐரோப்பியர்க்கு அறிவைத்திரும்பவும் தந்தருளியது. 'மகம்மதுநபி' யின் மருமகனான 'ஆலி' யென்பார் கல்வியறிவால் நிறைந்தசிரேஷ்டர்களையும அறிவை விருத்திபண்ணுவதில் அவாவுள்ள அறிஞர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.

அவர்கள் முன் 'கிரீக்' தேசத்தில் நடைபெற்றுவந்த கல்விமுறை சம்பிரதாயத்தைக் கைக்கொண்டு வித்தியாசாலைகளையும் கல்லூரிகளையும் பலவிடங்களில் ஸ்தாபித்தார்கள். மகம்மதுநபியின் திருவாக்கினின்று வெளிவந்த அற்புதமான வாய்ப்பிறப்பு இதுவாம்: "சத்ாரியத்தில் பிராணத்தியாகம் செய்யுமுறையில் தீரன் சிந்தும்ரத்தத்தைவிட வித்வான் எழுதும் மை உயர்நலமுடையது." துர்க்கிதேயத்தில் யுத்த வீரருடைய கத்தியின் தொழில் நடைபெற்று வருகையில், 'அராபியா' நாட்டில் வித்வானுடைய மை அதிகமாய் உபபோகப் பட்டுவந்தது. மகம்மதியர் ஆளுகைக்குள் ஒரு நாடு வசப்படவே அதன்கண் கல்வியும்பரவியது. வெற்றிகொண்ட யுத்தவீரர்களுக்குப் பின்னர் அடுத்து, வித்வான்களும் சாஸ்திர அபிஞ்ஞர்களும் ஜ்யோதிஷ சாஸ்திர விற்பன்னர்களும் தத்வசாஸ்திரிகளும் கணிதசிற்பசாஸ்திரிகளும் தொடர்வாராயினர். 'மகம்மதுநபி'யின் கொடியின் கீழ் 'ஸ்பானியா'தேசம்வந்து அமைந்தபின், இத்தகைய அறிஞர்கள்தோன்று வாராயினர். 'ஐரோப்பா' கண்டமுழுவதும் அவர்களிடம்கல்வி கற்க அவாக்கொண்டு சென்றது. பெருந்தூக்கந் தூங்கிக்கொண்டிருந்த 'ஐரோப்பா'கண்டம் 'இஸ்லாம்' மதத்தின் அநுகூலத்தினால் விழிப்பையடைந்தது. 'இஸ்லாம்' மதத்தினர் அறிவைப் பயக்கும் சாஸ்திரங்களை'ஐரோப்பா'வுக்குக் கொடுத்தார்கள். முன்னர் ஐரோப்பியர் பிறர் வார்த்தையைக் கேட்டு ஞாநமில்லாமலும் சுயபுத்தி யில்லாதவருமாய் மூட நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். 'இஸ்லாம்' மதத்தினர் பலவிடங்களில்வித்தியாசாலைகளை ஸ்தாபிக்கவும், ஐரோப்பியர்கள் கல்வி கற்கவும் தமக்குத் தாமே சிந்திக்கவும் தலைப்பட்டார்கள்.

17. பின்னர், நாம் இப்போது பிரஸ்தாபித் திருக்கின்றவர்களைப்போல் ஞாநதூதர் ஷை வெள்ளியம்பலத்தினின்று உலகத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மூலமாய் முதலில் ரஸவாத சாஸ்திரமும், பின்பு ரஸாயந சாஸ்திரமும், முதலில் ஜோஸ்ஸிய சாஸ்திரமும், பின்பு ஜ்யோதிஷ சாஸ்திரமும் உண்டாயின. வைத்திய சாஸ்திரமும் எங்கும் கற்பிக்கப்பட்டது. வியாதிகளைப் பரவாமல் தடுக்கும்படி சில சித்தி முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தவெள்ளியம்பலமே விசுவகர்மாபோன்று உலகக்ஷேமத்தின்பொருட்டு சகல விஷயங்களையும் நிர்மாணம் செய்வதா யிருக்கிறது, ஐரோப்பாக்கண்டத்தின் தற்கால ஸ்திதிக்கும் இதுவே அஸ்திவாரத்தை ஏற்படுத்தியது. தொழிலாளிகளையும் சிற்பிகளையும் அக்கண்டத்திற்குஅனுப்பியதும் அவ்வெள்ளியம்பலமே. தற்காலத்திய நாகரிகமும் அதற்குக் காரணமாயுள்ள மனோபாவமும் அமையும்படியாக ஏற்படுத்தியதும் அதுவே. மஹாத்மாக்கள் மனிதர்களுடன் உறவாடி நேரில் வியவஹரிக்காமற் போனாலும், உலகத்தின் மேலுள்ள அன்பையும் அபிமானத்தையும் விட்டார்களில்லை. உலக சம்பந்தத்தை அவர்கள் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் 'நான்' 'தான்' என்ற அகங்காரசக்தி யிப்போது அதிகமாய் மேலிட்டிருப்பதால், அவர்கள் உலகத்தில் தோன்றாம லிருக்கின்றார்களே யொழிய, அவர்கள் சக்திக்குறைவாலாவது உலக ஜனங்களின் மீதுள்ள பக்ஷத்தின் குறைவாலாவது அன்று.

18. ஐரோப்பாக் கண்டத்தின் ஒரு நூற்றாண்டின் சரித்திரத்தினால் அந்தவுயர்தர வெள்ளியம்பலத்தினின்றுஅனுப்பப்பெற்றுத் தோன்றிய புண்ணிய புருஷர்கள், பலவாறாக ஜனங்களால் ஹிம்சிக்கப்பெற்றும், சித்திரவதைக்குள்ளாகியும், துவேஷத்தின் நாநாவிதமான கொடுமைகளுக்குள்ளாகியும், நடைபெறுவாராயினர். ஜனசமூகத்தின் க்ஷேமத்தை நாடி அறிவைப் புகட்டவேண்டு மென்று 'ஐரோப்பாக்' கண்டத்திலவதரித்த ஒவ்வொருவரும் ஒருகையில் உயிரையும் ஒருகையில் மரணத்தையும் வைத்துக்கொண்டு காலங்கழிப்பாராயினர். மகாத்மாக்கள் ஏன் உலகில் தோன்றிவருகிறார்களில்லையென்று கேட்பீர்களாகில், அதற்குச் சமாதானம் என்னவென்றால், மேனாட்டில்(Inquisition)என்ற சங்கத்தார் உயிரோடு அறிஞர்களை நெருப்பில் கொளுத்திய கொடுமைகளைப் பாருங்கள்! ஞானிகளையும் அறிஞர்களையும் அடைத்துவைப்பதற்குக் கட்டின இருண்ட காராகிருஹசாலைகளைப்பாருங்கள்! (Copernicus) 'கோபர்னிகஸ்' என்பார் தம் மரணபர்யந்தம் ஜ்யோதிஷ சாஸ்திர சம்பந்தமாய் தாம் கண்ட விஷயங்களை வெளியில் விடாமல், மறைத்துவைத்திருந்ததை யோசியுங்கள்! 'ப்ருநோ'என்பார் ரோமாபுரியில் 'புஷ்பவயல்' என்று மறைப்புப்பெயரால் சொல்லப்படும் எரிதழல்மத்தியில் அக்நியால் வதைக்

கப்பட்டு உயிர் நீத்தார் என்பதைச் சிந்தியுங்கள்! 'காலீலியோ' (Galileo) என்பார் வதைப்பட்டு மண்டிபோடும்படி செய்விக்கப்பெற்று தான் கண்டறிந்த வுண்மையைப் பொய்யென்றுசொல்ல இயலாதவராய் உயிருடனே அக்நியால் மாண்டாரென்பதையும் ஞாபகத்தில் வையுங்கள்! இவ்விதமே மேனாட்டில், தோன்றின ஞானதாதர்களெல்லாம் சித்திரவதைக்குள்ளாகி மாண்டார்கள். அல்லது பலவிதமானகொடுமைகளுக்கும் துயரங்களுக்கும்உள்ளாகிச்சுகமில்லாக்காலங்கழித்துமறைந்தார்கள். முற்காலத்தில் நடந்தகொடுமைகளைப்பற்றி இப்போது நான் சொல்லுவானேன்! இக்காலத்திலும் ஜனங்கள் முன்பின்னாக அதேவிதமாக ஒழுகிவருகின்றனரே! 'ஹெலிநாம்பாள்' அம்மையாரின் சரித்திரத்தைக் கவனியுங்கள். உயர்ந்த அந்தஸ்து, செல்வம், சுதேசம் எல்லாந்துறந்து, தம்குருவைக்காண்பான் வேண்டி உலகத்தில் பலதேயங்கள் சுற்றினர். கடைசியில் அக்குருவைக் கண்டார். குருவினிடமிருந்து ஞானவிஷயங்களைக் கற்றார். தாம் அறிந்த ஞானக்கருவூலத்தை உலகிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற கருத்துடன்வெளிவந்தார். வஞ்சகிஎன்றும், கபடநாடகக்காரி என்றும், இவைபோன்ற கடுஞ்சொற்களால் உலகத்தார் அவ்வம்மையாரைச் சூடுபோட்டார்கள். உலகத்தார் அவரை நம்பாமலும், நிந்தித்தும் ஏளனஞ்செய்தும்,பலவிதமாய்த்தூஷித்தும்வந்தார்கள். கடைமுறையில் இவைகளின் பயனாய்ச் சிம்மம் போன்ற அவ்வம்மையாரின் தீரமான மநதும்கூட உடைந்து சோகமுற்றது. வைரம்பாய்ந்த அவர் சரீரமும் தளர்ந்து உலைந்துபோயிற்று.

19. இத்தன்மையாக உலகசரித்திரம் நிகழவும், மகான்களை உலகத்தார் இவ்வளவு குரூரமாய் நடத்தியிருக்கிறார்களென்ற மானக்கேடான ஒழுக்கத்தின் ஞாபகம் நம்மநத்திலிருக்கும்போதும், அதே வெள்ளியம்பலத்திலிருந்து கம்பீரமான ஒப்புயர்வற்ற ஒரு மகா புருஷனின் வரவை இப்போது திரும்பவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்! அப்படித்தோன்றும் மகாபுருஷர் சாதாரண ஞானதாதர் அல்லர்! உண்மையான பக்தி சிரத்தையுள்ள சிஷர்வகுப்பிலுள்ளவர்களில் ஒருவருமல்லர்; நூதந-சம்பிரதாயமுறையில், அதிகாரி புருஷர்களால் உலகத்தில் வரும்படி ஏவப்படுபவர்களில் ஒருவருமல்லர்;

அவர் பிறரதிகாரத்திற்குட்பட்டவருமல்லர்; அவரைப் போ வென்று சொல்லும்படியான பெரியார் யாருமிலர்; தாமே ஸ்வேச்சையாக உலகத்தில் தோன்றவேண்டுமெனச் சிந்தனையுண்டானல், அவ்விதம்நடக்கும் தகைமையுள்ளவர். அவரே ஜகத்குருவாவர். மஹர்ஷி போதிசத்வா பகவான் 'மைத்திரேய'ராவர். இனி புத்தராக ஆகப் போகின்ற மகாபுருஷரும் அவரே. குப்தமார்க்கமுறையைக் கொஞ்சமறிந்துள்ள யாம், உலகத்தில் அவரிருக்கிருர் என்பதற்கு அநுபவரூபமான சாக்ஷிபாயிருக்கின்ற யாம், அவர் வரவை எதிர்பார்க்கின்ருேம். ஜனங்கள் நிறைந்த உலகில் அவர் இறங்கும் முறையில் ஹிமாசலத்தின் செங்குத்தான பாறைகளில் அவருடைய காலடியின் எதிரொலி கேட்க ஏற்கனவே ஆரம்பித்திருக்கின்றது.! அதோ! அங்கே! நிற்கின்ருர். அவர், தாம் வெளிவரும் காலத்தை நோக்கி, நிற்கின்ருர். முன்னொரு காலத்தில் அவரை யூதர் தள்ளின உலகத்தை அன்பார்ந்த கண்ணினல் கருணையுடன் திரும்பவும் பார்க்கின்ருர்காண்! உலகம் முன்போல், ஒருகால் அவரை யங்கீகரியாமல் அலக்ஷியம் செய்தாலும் செய்வதாகும்! ஆயினும், அவர் வரவேண்டிய உரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கின்ருர்! அவர் வருமுன்னர் அவர் வரவை அவர் தூதர்கள் எங்கும் பிரசித்தம் செய்வார்கள். உலக ஜனங்கள் அவர் வரவை யங்கீகாரம் செய்யும் பொருட்டுச் சொற்பமேனும் ஆயத்தம் செய்யப்பெறுவார்கள்.

20. அவர் வருவார் என்று உலக ஜனங்கள் இப்பொழுது எதிர்பார்த்துக்கொண்டு மௌனம் சாதிக்கின்ருர்கள். ஒரு ஞானகுரு அவதாரமாகவேண்டியதென்றும், உலகத்திலுள்ள மதங்களெல்லாம் ஒருமைப்பட்டுச் சமரசமாக அமைந்து நடைபெறவேண்டுமென்றும், ஜனசமூகத்தில் உண்மையான சகோதரபாவம் நிகழவேண்டுமென்றும், மேனுட்டில் சமயமுறைக்கேற்பட்ட ஒவ்வொரு பிரசங்க பீடத்தினின்றும் தாகமுள்ள முறைப்பாடு கோஷித்துக்கொண்டிருக்கின்றது. உலகத்தின் ஹிருதயமானது அவ்வரவை எதிர்பார்த்து நன்னம்பிக்கை கொண்டு துடிக்கின்றது. உலகத்தின் மநம் அவர் வரவை ஆவலுடன் சிந்தனைகொள்ள ஆரம்பிக்கின்றது. சில வருஷங்களுக்குள்ளாக சமீபகாலத்தில் அவர் நல்வரவை வேண்டி

ஜநசமூகத்தினின்றும் ஆவல் பொருந்திய பெருகிய ஆரவாரம் அவரை நோக்கிச் செல்லும். அவர் சிரவணேந்திரியமோ, நுண்ணிய சப்தத்தையுங் கேட்கு மியல்பினது. அவருடைய ஹிருதயமோ, உலகம் க்ஷேமம் பெறுதலுக்கு விரோதமாய் ஒருகாலும் அடைபடாதது. அதனால், தாகத்துடன் நாம் அவரை நோக்கிச் செய்யும் பிரார்த்தனை இதுவாம். "உயர்தர வேள்ளியம்பலத்தின் முதல்வ! உலகத்தின் நிகழும் சமயங்களை நடாத்தும் மகாத்மாவே! உலகத்திற்கு வந்தருளவேண்டும்; உம்முடைய சந்நிதாநத்தை யுலகம் வேண்டுகின்றது; உம்முடைய சந்நிதாநத்தை நோக்கிப் பேராவல் கொண்ட ஜநங்களைக் கடாக்ஷித்தருளும். சாந்தமும் சமாதாநமும் பயக்கும்படியாக அம்முதுமொழியை உரையிடும். அதன் மூலமாய் ஜநசமுகத்தில் நிகழ்கின்றஉலகப்போராட்டங்களைத் தொலையும்.சகோதர தர்மமென்ற வார்த்தையை யுரைத்தருளும்! அதனால் ஜாதிகளுக்குள் நிகழ்கின்ற வைஷம்யமும் மேல் கீழ் என்ற போராட்டமும் அழிவுறும். *ஜநசமுகமெல்லாம் ஒரே குலம் என்ற மெய்யுணர்வை மனிதர் மநத்தில் பதியவையும். உம்முடைய அன்பின் பூர்ண வலியுடன் உலகில் தோன்றுவீராக. உம்முடைய கம்பீரமான சக்தியுடன் விஜயம் செய்வீராக. உம்முடைய வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற உலகை ரக்ஷிப்பீராக. தேவர்கட்கும் மனிதர்கட்குஞ் சமமான குரு நீரே யாவீர்.

ஓம் தத் ஸத் ஓம்.

ப. நா. அந்நிபெஸண்டு.

## நன்மொழி.

---

112. நல்ல புத்தகங்கள் வாலிபத்தில் நல்வழிப்படுத்தும் நற்றுணையாம்; முதிய வயதில் மநத்தைச் சுகப்படுத்தும் நண்பன் போன்றவையாம்; தனிமையாயிருத்தலின் துன்பத்தைத் தொலைத்து ஆறுதல் பயக்கும் ஆதரவாம்; உலகவாழ்வில் மனிதர் கொடுமையையும், நக்கவலையையும், துக்கத்தையும் மறக்கச்செய்யும் நற்சாதநங்களாம்.

---

* ஒன்றேகுலமும், ஒருவனே தேவனும் நன்றே நினைமின்—திருமந்திரம்.

242

## புத்தகவரவு.

---

பதிவனக்கும்மி:—இது தஞ்சாவூர் ஜில்லா இரண்டாம் கட்டளையி லிருக்கும் ஸ்ரீ கங்காஜடேச சர்மா அவர்களால் இயற்றிய புத்தகம்; நன்றாய் அமைந்துள்ளது. இதன் விலை அணா 1 தான்.

## பத்திரிகைவரவு.

---

நாடகாபிமானி:—இப்பெயருள்ள ஓர் மாதாந்த ஆங்கிலத் தமிழ்பத்திரிகையின் இரண்டாம் பகுதி நமக்குக் கிடைத்திருக்கிறது. இத்தகைய பத்திரிகை மிகவும் அவசியமானது. இயல், இசை, நாடகம் என்ற முப்பான்மையாய்த் தமிழ்ப் பாஷை நடைபெற்றது. இயலைத்தவிர, இசை நாடகமுறைகள் சம்பந்தமான பிராசீந இலக்கியங்கள் இப்போது நடைபெறுகின்றனவாகத் தோன்றவில்லை. நாடகம் என்பதும் ஜநங்களை நல்வழிப்படுத்தும் இலக்கிய சாதநங்களில் முதன்மைபெற்றதாம். அதனைப் பயிலுவோர்சிலக் குறைவால் அதன் கௌரவம் குன்றி நாளடைவில் அதுவும்டொய்த்துப்போனதுபோலும். இக்காலத்தில் மேல் நாட்டு நாகரிகத்தின் தூண்டுதலால், நாடகமுறை உயர்நலம் பெற்றுவருகிறது. அது சம்பந்தமாக, தனித்தப் பத்திரிகை இருக்குமாயின் அதன் நலத்தை அபிவிருத்தி செய்ய இயலும். பிரகிருத பகுதியிற் கண்ட வியாசங்கள் நன்றாய் எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளன. இவ்விதமே இனிவரும் பத்திரிகையின் பகுதிகள் இருக்குமாயின் இப்பத்திரிகை நம் நாட்டாருக்கு நனிநலம் பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்பத்திரிகை சில பாகம் ஆங்கிலத்திலும், சில பாகம் தமிழிலும் இப்போது எழுதப்பெற்று நடைபெறுகின்றது. பூர்ணமாய் இப்பத்திரிகை தமிழிலேயே எழுதப்பெற்று நடைபெறுதல் அதிக பயன் அளிக்குமன்றோ? அவ்விதம் இப்பத்திரிகை நடைபெறவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

## சமாசாரம்.

ஒரு பெட்டைக்கோழிக்கு, துவைநு மாத்திரையைத் திநந்தோரும் கொடுப்பதினல், திநமொன்றுக்கு 2 முட்டைகள் இடுகிறதாக பாஸ்டன் வைத்திய பத்திரிகை தெரிவிக்கிறது.

---

ஒளியைக் காணுமுன்னர், ஒளியைப் பார்க்கும் நேத்திரத்தின் அமைப்புமுன்னரே பூர்ணமாய் எற்பட்டுள்ளது. அவ்விதமே, ஒலியின் சம்பந்தம்

ஏற்படும் முன்னரே, கர்மேந்திரியத்தின் அமைப்பு பூர்ணமாய் ஏற்பட்டுள்ளது. இதனால், இவைகள் முன்னர் பூர்ணமாய் அமையும்படி செய்தது யாது என அறியும்பொருட்டு ஒரு மேனாட்டு புலனறிவு சாஸ்திரி ஆராய்ச்சி செய்தவர், சூக்ஷ்மமான ஒரு சக்தி இருத்தற்பாலது எனத் தீர்மானித்துள்ளார். அஃதை ஆத்மா என்று சொல்லலாம் என்றார். இவ்விதமே சாந்தோக்கிய உபநிஷத்தும், (VIII-12, 4, 5.) உபதேசித்திருக்கிறது. ஆத்மா ஸ்தூலமான பிராகிருத பூமியில், பார்க்கவும், கேட்கவும், முகரவும், ருசிக்கவும், நினைக்கவும் விரும்புகிறான். அதனால் கண், காது, கிராண இந்திரியம், ருசிக்கிற இந்திரியம், மநம் என்ற கரணங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான். மேனாட்டுப் புலனறிவு சாஸ்திரிகள், சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்கள் முன் ஏற்பட்டு, அவைகளின் தூண்டுதலால், அவைகளுக்குரிய இந்திரியங்கள் உண்டாயின என்றார்கள். இப்போது அதிக ஆராய்ச்சியால் அதற்கு மாறான அபிப்பிராயங்கொள்ள இடம் உண்டாயிற்று. இதைப்பற்றி "ஹிந்து மததூஷணையின் பரிகாரம்" என்ற நூலில் 75, 76-ம் பக்கங்களைப் பார்க்க.

---

சென்ற மீ 24, 25உகளில் பரமக்குடியில், மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஞான க்கிளைச்சபைகளின் கூட்டம் நான்காம் முறை கூடிற்று. காலிபோர்ணியா நாட்டின் ஸான்பிரான்ஸிஸ்கோ என்னும் நகரவாஸியாகிய ஸ்ரீமான் இர்விங் கூபர் என்பார் அக்கிராஸநம் வகித்தார். "இந்தியா தேசம் உலகத்திற்கு, முக்கியமாக மேனாட்டாருக்கு செய்யும் உபதேசம்" என்பதைப்பற்றியும் "மநச்சாந்தமே யோகம்" என்பதைப்பற்றியும் அவர் விஸ்தாரமாக உபந்யாசம் செய்தார். "கர்மகதியைப்" பற்றி மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளும், "பிரஹ்மஞானத்தைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ அ. ரெங்கஸ்வாமி அய்யரவர்களும், மனித சரீரத்தின் மகிமையைப்பற்றி டாக்டர் ஆர். சி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களும், புநர்ஜந்மத்தைப்பற்றிப் பெரியகுளம் மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரராஜ அய்யர் அவர்களும், "மாதங்களுக்குள் மார்க்கசீர்ஷோஸ்மி" என்பதைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ எம். நாராயணஸ்வாமி அய்யர் அவர்களும், பக்தியைப்பற்றி பண்டிதர் சாம்பசிவ சாஸ்திரி அவர்களும், மஹாத்மாக்களை அடையும்முறையைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ எல். சுப்பிரமணிய அய்யர் அவர்களும், உபந்யாசம் செய்தார்கள். ஸ்ரீமான் ராமச்சந்திர நாயக்கர் அவர்கள் "பிரஹ்மஞானசபையின் நோக்கங்களை"ப்பற்றி எழுதியனுப்பிய வியாசமும் வாசிக்கப்பட்டது. 24உ ஞாயிற்றுக்கிழமை இரவில், புகைப்படம் மூலமாய் வாநசாஸ்திரத்தின் சில அற்புதங்களைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ மதுரை ப. நாராயண அய்யர் அவர்கள் உபந்யா

சம் செய்தார்கள். பரம்பக்குடிக் கிளைச்சபையார் விருந்தோம்பல் என்ற தர்மத்தைச் செவ்வையாக நடத்தினர்கள். இரண்டு ஜில்லாக்களிலுள்ள சபைகளின் அங்கத்தினர்கள் 50 பெயர்களும் 100 அபிமானிகளும் கூடினர்கள். இறைவன் அருளால் எல்லாம் நன்றாய் நடைபெற்றது.

---

தஞ்சாவூர் ஜில்லா உக்கடை கிராமத்தில், அஜ்ஜில்லாவின்கண்ணுள்ள பிராஹ்மணராகக் கிளைச்சங்கங்களின் பெரிய கூட்டம் சென்றமீ 23, 24உ களில் கூடிற்று. மிகவும் விமர்சையாக அது நடைபெற்றது. மகா-ா-ா-ஸ்ரீ சப்ஜட்ஜு தேசிகாச்சாரியார் அவர்கள் அக்கிராஸநம் வகித்தார்கள். அநேகர் உபந்நியாசம் செய்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள், கெ. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் செய்த உபந்நியாசங்கள் முக்கியமாக நன்கு மதிக்கத்தக்கன. மகா-ா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் அண்ணாசாமித் தேவர் அவர்கள் வந்த விருந்தினர்களை மிகவும் அன்புடனே ஆதரித்தார்கள்.

பத்திராதிபர்.

---

## நன்மொழி.

---

### சத்சங்கத்தின் பிரயோஜனம்.

113. சன்மார்க்கத்தில் ஒழுகுவான், மநம் சிதராமல், ஒருமுகப்பட்டவனாய் இருத்தல் வேண்டும். உலக சம்பத்து பெறவேண்டுமானாலும்கூட மநம் ஐக்காகிரதை பெற்றவனே நலம்அடைகிறான். ஒருநிலைப்பட்ட தீர்மானம் கொள்ளுதலால் உண்டாம் நலம் நன்கு கவனிக்கத்தக்கது. உலக சம்பத்துக்கருதுபவனுக்கு, அவன் பலன் அவன்முன் நேரே தோன்றும். சன்மார்க்கத்தில் ஒழுகுபவனுக்கு அவன் பலன் அவன்முன் நேரே தோன்றாது. அது மறைந்தே இருக்கும். இக்காரணம்பற்றியே, ஓர் ஓர் சமயத்தில், அவன் கொண்ட தீர்மானம் தளரும்; மன ஐக்காகிரதையும் உலைந்து சோர்வுபெறும், சிதரும். இவ்வண்ணம் நேராதபடி நம்மைவிட அந்நெறியில் பழகி மேன்பாட்டை பெற்றவர் சங்கத்தை நாடவேண்டும். அவர் உண்மையைக்கண்டவராயிருப்பர். நமக்கு தடுமாட்டமும் மநசோர்வும் வரும்போது, அவர் அநுபவஞானத்தால் நம்மைத் தேற்றுவர், நம்மநம் தெளிவிப்பர்.

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 மாசம் | 4—0—0 | அரைபக்கம் | 1 மாசம் | 2—8—0 |
| ,, | 3 ,, | 10—0—0 | ,, | 3 ,, | 7—0—0 |
| ,, | 6 ,, | 20—0—0 | ,, | 6 ,, | 12—0—0 |
| ,, | 1 ௵ | 36—0—0 | ,, | 1 ௵ | 18—0—0 |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகம், துண்டு பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமததூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| அவதாரங்களின் உண்மை | 0-8-0 |
| ஏசுகிறிஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மஞான சபை | 0-0-1 |
| ஷை யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| ஷை ஆங்கிலத்தில் | 0-0-3 |
| அஷ்டமிபிரதக்ஷிணம் | 0-0-1 |
| ஏசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| மௌனவாக்கு | 0-2-0 |
| சன்மார்க்கதீபம் | 0-2-0 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரெசிடெண்ட், பிரஹ்மஞான சபை, மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும். |

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் 1க்கு ரூபா | 0 | 14 | 0 | | 9 முழம் 1க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 ஷை | 1 | 4 | 0 | | 10 ஷை | 2 | 8 | 0 |
| 7 ஷை | 1 | 8 | 0 | | 12 ஷை | 3 | 8 | 0 |
| 8 ஷை | 1 | 12 | 0 | | 15 ஷை | 4 | 8 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும்,நைஸூம்,'நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உறுப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

விலாசம்: மானேஜர்,

**பட்டு பீதாம்பர கம்பெனி,**

காசி, **Benares City.**